


ஏ. எல். எம். பளீல்

# தரையில் வீழ்ந்த தங்கத் தட்டு

ஏ. எல். எம். பளீல்

# தரையில் வீழ்ந்த தங்கத் தட்டு

# பிறந்தது முதல் இறந்தது வரை.


- தலைப்பு : தரையில் விழுந்த தங்கத்தட்டு
- திகதி : 2006.02.19
- வெளியீடு : நெக்கா நற்பிட்டிமுனை
- பிரதிகள் : 5000

# தரையில் வீழ்ந்த தங்கத்தட்டு

கல்முனை நகரமது கட்டிக்கொண்டதுவும்,
மனமது ஈன்று கொடுக்கும் - பல
மானிடர்கள் வாழ்ந்து கொள்வதுவும் ,
புனிதர்கள் வாழ்ந்த பூமியாகத் திகழும்
பொன் கொழிக்கும் மருதமும்,
தமிழ் முஸ்லிம் இரு இனங்களும்
ஒரு மொழியால் ஒன்று பட்டு,
இனிதே வாழ்வதுமான,
நற்பிட்டிமுனையெனும் நாமம் கொண்ட
கிராமம் அது.
சீனித்தம்பி அகமது லெவ்வை தந்தைக்கும் ,
சீனித்தம்பி ஆசியத்தும்மா தாய்க்கும் ,
நான்கு பெண் சகோதரிகளுக்கும்,
நான்கு ஆண் சகோதரர்களுக்கும்,
பொதுவாக ,
ஒன்பது பிள்ளைகள் கொண்ட
ஒரு பெரும் எண்ணிக்கை குடும்பத்தில் ,
ஆறாவது பிள்ளையாகவும்,
ஆண் வரிசையில் மூன்றாவதாகவும்,
கருத்தரித்த ஒரு ஜீவன்,
கடந்த 1965.01.01 ஆம் திகதி,
அழகு கொழிக்கும் பொன் முகம் கொண்டு
அழுது கொண்டே பிறந்தது.
அவர்தான் பளீல். !
சுட்டிக்குழந்தையான இவர்,
1970ஆம் ஆண்டில் கல்விக்கான
ஆரம்பத்தடத்தினை அவ்வூரின் கண்ணான
அல் - அக்ஸா மகா வித்தியாலயத்தில்,
காசிம் எனும் ஓர் இமயம்
அதிபராக இருந்த வேளை
ஆரம்பித்தார்.





வகுப்பு பாடங்களில் முதலிடமும்,
வகுப்புதனில் முதலிடமும் கொண்ட இவர்,
அரசு வைத்த ஐந்தாம் வகுப்பு
புலமைப் பரிசிலில் சித்தி பெற்றதில்
மட்டுமல்லாமல்,
பாடசாலையின் பெயரையும், புகழையும் ஏனைய
பாடசாலைகளிலும் பேசவைத்தார்.
இதன் மூலம் !
இவர் தன் வாழ்க்கையின்
முதலாம் உயர்ச்சியினை
விளையும் பயிராக முளையிலே
தெரியப்படுத்தினார்.
புலமைப்பரிசிலின் சித்திக்காக
பல வித்தகர்கள் விளைந்த கல்முனை
பாத்திமா கல்லூரியில் தன் கல்வியை
ஆறாம் தரத்திலிருந்து தொடர்ந்தார்.
இதனிடையே,
கஷ்டம் என்ற ஒன்றை மட்டும்
கண்டு கொண்டிருக்கும் தன் குடும்பத்தில்,
ஆதம்லெவ்வை தந்தை மட்டும்
ஓடாவித் தொழில் செய்து கொண்டு
ஒன்பது பிள்ளைகளுக்கும்
உணவு, உடை, கல்வி கொடுப்பது என்பது
கனவிலும் வராத செய்தி.
கஷ்டம்தான் என்றிருந்தாலும் ,
அரிசி குற்றி விற்றதுடன்
பாய் இழைத்து மக்களை
படிப்பிக்கவும் தாய்
ஆசியத்தும்மா தயங்கவில்லை.
ஆறாந்தரத்திலிருந்து
ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்
80ஆம் ஆண்டு சாதாரண தரப்பரீட்சையில்
4D, 4C எனும் தரத்தினைப்பெற்று,
தனது பாடசாலையை பிரதேசம் எங்கும் பேச வைத்ததுடன்,
இரண்டாம் உயர்ச்சியிலும்
வெற்றி கண்டது மட்டுமல்லாது ,

சிறந்த பெறு பேற்றிற்காக
மாவட்ட மட்டத்தில் ,
அந்த நேரத்து அரசாங்கம் வழங்கிய
**அக்சி சாசன** சபையில்
விசேட கொடுப்பனவான
மாதா மாதம் 90 ரூபாவையும் பெற்றார்.
ஆறாம் வருடம் அந்த பாடசாலையிலே
அருட் சகோதரர் மத்தியூ வின்
அதிபர் கடமையின் போதே,
உயர் தரத்தின் விஞ்ஞானப் பிரிவில்
உயிரியல் கற்றார்.
மருத்துவத்துறையை எதிர்பார்த்த இவருக்கு,
1983ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சை முடிவு
விஞ்ஞானப்பட்டதாரியாகவே வர முடிந்த
2C ,2S ஐக் காட்டியது.
மீண்டும் ஒரு முறை எடுத்தால் இதிலிருந்து
மீண்டு வரமுடியும் என்றாலும்,
குடும்பத்தின் கஷ்டத்தால்
கிடைத்ததை கொண்டு முன்னேற
கிழக்குப்பல்கலைக்கழகத்தில்
காலடி வைத்தார்.
AMP எனும் துறைக்குப் போகும்
வாய்ப்புக்கள் இருந்த போதிலும்,
பொல்லாத அரசியல் செல்வாக்கு
அவருக்கு
மிக நீண்ட தூரத்தில் இருந்ததால்,
AMP துறைக்கும் இவருக்கும் இடையில்
இணைக்க முடியாத தூரம் இடைவெளியானது.
இறுதியில் ,
விஞ்ஞானப் பட்டதாரியாக மட்டும்
விடை பெற்றார் பல்கலைக்கழகத்திலிருந்து
இதனிடையே !
எழுத்தாற்றலும், கவியாற்றலும் ,
இயற்கையிலே குடி கொண்ட இவர்,
**மடிக்குள் விழுந்த வெள்ளிகள்** என்ற
கவிதை தொகுப்பு ஒன்றை எழுதி
பலர் மனதுக்குள்ளும் நிலையாக விழுந்தார்..





எழுத்தாளனாக அறிமுகமான இவர் ,
பல துறைகளிலும் எழுத ஆரம்பித்தார்.
பட்டதாரியாக இவர்
பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில்
ஏதோ ஒரு விடயத்திற்காக ,
எழுந்து முன் நின்று தலைமை தாங்கி,
எதிர்த்து ஊர்வலம் செய்ததற்காக
இவருக்கு கிடைக்க விருந்த ,
வகுப்புத்தர வாய்ப்பையும் ,
இழக்க வேண்டிய துரதிஷ்டமும்
அவருக்கு இருக்கத்தான் செய்தது..
கஷ்டங்கள் அவரின் உச்சியில் இருந்தாலும்
முயற்சியில் வெற்றி
அவர் உள்ளங்கையிலேயே இருந்தது.
பட்டதாரியான இவர் படித்த பாடசாலையிலே
ஓரிரு வருடங்கள் அதிபர் மத்தியுவுடன் ,
சேவை மனப்பாங்கில் சேர்ந்து
நியமனமின்றி ,
ஏழை மாணவர்களின் கற்றலை
எளிமைப்படுத்தினார்.
பின்னர்
1986ஆம் ஆண்டு அதே பாடசாலையில்
அதே ஆசிரியர்களுடன் பழகும் சக,
ஆசிரியராக அரசாங்க நியமனம் பெற்றார்.
தாவரவியல் பாடத்தினை ஒரு
தாவரவியலாளன் போல்,
அக்குவேறு ஆணிவேராக
பிரித்து பிரித்து போதித்தார்.
இவர் திறமை கண்ட,
இரு இன மாணவர்களும்
இவர் பக்கம் திரும்பி ,
மருத்துவத்துறைக்குச்செல்லும் வழியை
இலகுவாக்கினார்கள்.
இதன் மூலம்
BOTANY FALEEL என்ற புனைப் பெயருடன்,
கல்விப்பிராந்தியத்தில் கண்ணென நின்றார்.

ஆசிரியராக
கடமையாற்றும் காலங்களில்
கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையில்
கடைசிக் காலங்கள் உருண்டன.
இவ்வேளையில் ,
இலங்கை நிர்வாக சேவை
பரீட்சை முடிவின் பேறாக,
1991.04.01 ஆந்திகதிய நியமனக்கடிதம்
உதவி அரசாங்க அதிபராக
கல்முனைக்கு அழைத்தது.
இது கண்ட ,
நற்பிட்டிமுனை மண் அவருக்கு
நற்பெரும் வரவேற்பொன்றை
நாடறிய வழங்கியது.
பின்னர்
அதிபர் மத்தியுவுடன் சேர்ந்து
அவர் படித்த பாடசாலையும்
அளித்தது ஒரு பாராட்டை.
இது போன்ற எத்தனையோ
இனியமையான செய்திகள் தொடர்ந்தது அந்நாளில்.
அதிலிருந்து ,
பனிரெண்டு வருடங்கள்
பல கஷ்டங்களையும் தாங்கி
பணியாற்றிய வேளையிலும் கூட ,
எத்தனையோ படைப்புக்களை
ஏழைகளின் கல்விக்காக,
வித்தகனாகத் தன்னைக் காட்டும்
விடயங்களாக புத்தக வடிவில்
வெளியிட்டார்.
இத்தனையும் கண்ட
அக்கரைப்பற்று YMMA
கலைச்சுடர் என்னும் பட்டத்தையும்
அளித்தது அவருக்கு வாஞ்சையுடன்.
திருமண பந்தம் பேச ,
அமைச்சர்கள் உட்பட எத்தனையோ
கோடீஸ்வரர்கள் கூட கூடி நின்ற போதும் ,





தாய்ப்பேச்சோடும் , தன் ஊரோடும் கொண்ட பாசத்தால்
1993.05.01 ஆந்திகதி நற்பிட்டிமுனையின் ,
பணம் பேசும் தொழிலதிபர்
கலந்தர் லெவ்வை முகம்மது இப்றாகீம்
முகம்மது இஸ்மாயில் பாத்தும்மா
எனும் தம்பதிகளின் ,
மூன்றாம் மகளான ஆயிசாவை
இறைவன் சாட்சியாக,
ஊர் மக்கள் முன்னிலையில்
உறவுத்துணை கொண்டார்.
ஆசைக்கொரு ஆணும்
ஆஸ்திக்கு ஒரு பெண்ணுமாக
இரண்டு பிள்ளைகளையும் ஈன்றெடுத்து வளர்த்தார்.
கல்முனையின் பிரதேச செயலாளராக
கடமையாற்றிக்கொண்ட காலங்களில்
கல்முனை நகர சபையின்
விசேட ஆணையாளராகவும்,
பலநோக்குக்கூட்டுறவுச்சங்க
விசேட ஆணையாளராகவுமிருந்து
சேவைகள் பல செய்தார்.
இதனிடையே 2003.01.01 ஆந்திகதி
காத்தான்குடி பிரதேசத்தின்
பிரதேச செயலாளராக இடம் மாற்றம் பெற்றார்.
பிரதேச செயலாளராக இருந்த வேளையிலும் ,
ஊடகத்துறையில் விற்பன்னராவதற்கு
இதழியல் பட்டயப்படிப்பை முடித்ததுடன்,
குறிப்பிட்ட இத்துறையின்
விரிவுரைக்காக விரைந்தார்.
தென்கிழக்குப் பல்கலைக்கழகம் நோக்கி..
அத்துடன்
சட்டக்கல்லூரியிலும் வெளிவாரியாக
சட்டக்கல்வியை மேற்கொண்ட அதே வேளை,
கல்விக்குத் துணை செய்ய வேண்டி
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்
பல்கலைக்கழகங்களுக்கான பதிவாளராகுவதற்கான
அத்தனை ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

தொடரான பிரதேச செயலாளர் சேவையில்
உதவி மாவட்ட செயலாளராகும்
தகுதியும் கொண்டிருந்த அவர் ,
பிரதேசத்தில் ஒரு அதிகாரியாகவும் ,
பத்திரிகைகளில் ஒரு ஊடகவியலாளராகவும்,
கதையாசிரியராகவும் ,கவிஞராகவும் ,
பல துறை விற்பனராக இருந்த வேளை
2005.12.02 ஆம் திகதி கடமையில் இருக்கும் போது
காரியாலயத்தில் வைத்து ,
துப்பாக்கி ரவைகள் துளைத்தன அவர் நெஞ்சை...
பிழைத்து விட்டார் D S என்னும் செய்தி
2005.12.04 ஆம் திகதி எதிர்மாறாகி
இறந்து விட்டர் என்னும் இன்னல் செய்தி
பறந்தது காற்றில் நாடெங்கும் .
செய்தி கேட்ட கரையோர மாவட்டம்
செயலிழந்து கண்ணீரில் மிதந்தது..
வாழக்கையின் பல கஷ்டங்களுக்கு மத்தியில்
பல முன்னேற்றப்படிகளை ,
தனது விடா முயற்சியில் உயர்ச்சியாக்கிய அவரின்
இறுதி யாத்திரையும் கூட ,
ஆகாய மார்க்கம் மூலம் உயர்ந்தே இருந்தது.
மடை திறந்த மக்கள் கூட்டம் புடை சூழ்ந்து
நற்பிட்டிமுனையின்
நடமாடும் பல்கலைக்கழகம் பளீலை
நல்லடக்கம் செய்தது.
பலர் படிப்பதற்கு புத்தகங்கள் அமைத்திட்ட அவரின்
மரணச் செய்தி கூட ஒரு புத்தகமாகியது.

**- நமுனை எம் சமீர். –**





# இதயத்தின் இடைவெளிகள்

# அருட் சகோதரர் கலாநிதி S A I . மத்தியூ அவர்களிடமிருந்து....

ALM பளீல் எனது சிரேஸ்ட மாணவன்.
எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஒரு மாணவன்
ALM பளீல் என்ற எனது மாணவன் தனது கல்லூரியைப் பற்றியும்
அக்கல்லூரியின் அதிபராகிய என்னையும் எச்சந்தர்ப்பத்திலும்
கௌரவிக்கத்தவறவில்லை.
இது அவரது ஆண்மீக நன்றிப்பெருக்கின் ஒரு கோடு.
கோடு என்பது மலை உச்சியை இங்கு குறிக்கின்றது.
அவரது இரங்கல் உரையின் போது
மட்டு நகர், அம்பாறை அரசாங்க அதிபர்கள் மத்தியில் நான்
அவருக்கு சூட்டிய பட்டம் ஒரு மாமனிதனாகும்.
ஆறாம் வகுப்பில் நான் அவரை சந்தித்தேன்.
நான் நிர்வகித்த கல்லூரி இப்பொழுதும் பல்துறை ஆற்றல் வாய்ந்த
மாணவர்களின் மேடைகளாகவும் களங்களாகவும் அமைந்திருக்கின்றன.
அந்த மேடைகளில் எழுத்தாளர்களுக்குரிய ஓர் உயர்ந்த மேடை
அந்த மேடையில் நடை பயின்றவர்கள் பலபேர்.
பிரபல எழுத்தாற்றல் கலை வல்லுனராகிய உமா வரதாரஜனும் ஒருவர்
அவர் தமிழ்மணி அது எனக்கு மகிழ்ச்சி எனக்கோர் மகுடம்.
இருக்குமாயின் அதில் ஓர் சிறப்பு மணி
தனது ஊரைப்பிரபல்யப்படுத்துவதற்கு நற்பிட்டிமுனை பளீல்
என்ற பெயரைத்தாங்கிய எனது சிரேஷ்ட மாணவன்
பல்கலைக்கழகம் சென்றார். கிழக்குப் பல்கலைக்கழகம்
விஞ்ஞானப்பட்டதாரிப்பட்டம் . எனக்கோர் அழைப்பு பட்டமளிப்பு விழாவுக்கு.
விபுலானந்த இசை நடனக்கல்லூரி மண்டபம்
மகிழ்வுடன் சென்றேன். அங்கு மற்றுமோர் பட்டதாரியையும் கண்டேன்
அவர் நேசராணி என்ற BSc பட்டதாரி.
அவரைப்பின்னாளில் அழைத்து நான் தலைமை வகித்த கல்லூரியில்
விஞ்ஞான இரசாயனப்பட்டதாரியாக ஏற்றுக்கொண்டேன். இக்கல்லூரிக்கோர்
மகுடம்.
பளீல் அவர்கள் எமது கல்லூரியின் வசதிக்கட்டண ஆசிரியராக நியமனம்.
பளீல் குன்றின் மேல் இட்ட திலகம்
சோபித்தார்... சோபித்தார்... சோபித்தார்...
அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் அவர்தம் கல்விச்சேவையை
விழுமியதாக ஏற்றுக்கொண்டார்கள்.





விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறையினால் எனது விழுமிய ஆசிரியனை,
மாணவனை கல்முனை ஸாஹிறா கல்லூரியின் அதிபர் MC ஆதம்பாவா
அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க அங்கு அனுப்பி வைத்தேன்.
அக்காலத்தில் அவர் SLAS பரீட்சையில் சித்தி அடைந்தார்
கார்மேல் பாத்திமா கல்லூரி அவரை வரவேற்றது. அதுவும் எனது
தலைமையில். அம்பாரை மாவட்டத்தின் அரசாங்க அதிபராக நீங்கள்
வரவேண்டுமென அவரது அதிபரான நான் வாழ்த்தினேன். வாழ்க வளர்க
என வாழ்த்தினேன்.
பொதுநலத்தில் தூய பணி சிறக்க வெள்ளாடை புனையவழுத்தினேன்.
அதை அவர் சிரமேற்கொண்டார்.
காலங்கள் கஷ்டமானவைகள் எதிர்பார்ப்புக்கள் முரண்பாடுகளைக்
கொண்டவைகள் அவர் பணி சிக்கலானது.
கல்முனையில் நான் ஓய்வு பெற்றபோது எனது முதல் மாத ஓய்வூதியத்தை
அவரிடம் பெற்றுக்கொண்டதும் புகைப்படம் பிடித்ததும் எனக்கு மகிழ்ச்சி.
எனது ஓய்வின் பின்னர் தமிழ்மணி உமா வரதராஜன் அவர்கள் பகிரதம்
என்ற எனது வாழ்நாள் போற்றும் பத்திரிகை ஆசிரியர் பெரிதும் முயற்சி
செய்தார்கள் அதில் மறைந்த ALM பளீல் அவர்களின் கட்டுரையும்
இடம் பெற்றது. அது கௌரவம் பெற்ற கட்டுரை
தனது கட்டுரையில் தனது கல்லூரியையும் அதிபரையும் ஆசிரியர்களையும்
மதித்து எழுதிய நன்றிக்கட்டுரை.
நன்றி மறவா ALM பளீல்
சிறப்பு மிக்க ஒரு நிர்வாகி,
அன்பும் பண்பும் மிகு நிறைவாளன்,
பல நூல்களின் ஆசிரியன்,
ஆய்வுகள் பல செய்தவன்,
சிறுகதை நாவல் போன்ற இலக்கிய கர்த்தா,
இன்னும் சூரியனைப் போல் பிரகாசித்திருப்போர்
41 ஆவது அகவையில் மறைந்து விட்டாய்
41 வது வயதில் அவர் சாதித்தவை ஏராளம்
சுப்பிரமணிய பாரதி 39 அகவையில் இறந்தார்
மேல் நாட்டுக்கவிஞர் ஷெல்லி 24வயதில் கண்களை மூடினார்.
ஆனால் வரலாறு படைத்தான். எமது கலைஞன் எழுத்தாளன் நிர்வாகி

விஞ்ஞானப்பட்டதாரி சமூக விஞ்ஞானி தனது ஊரைப் பிரபல்யப்படுத்தியவன்
இன்னும் எத்தனையோ..
எனது மாணவன் மறைந்து விட்டான்.
மறைந்தனையோ எனது இளம் மாணவ மணியே
நீ எண்ணிய சாதனையை யாரோ முடிக்க வல்லர்
எனினும் இறைவன் உமக்குத்தந்த அகவைகள் 41தான்.
உனது மூத்த மகிந்தனை 2000 ஆம் ஆண்டில் முதல் மாணவனாக சேர்க்க வேண்டும் இது எனது எண்ணம்.
சேர்த்தேன். அது உனது பெருமை
நீ என்றும் வாழ்வாய்.

கீர்த்திசிறி SAI **மத்தியூ**
SLEAS, B.A, Dip,in,Ed, Dip.in.mgt, MSc, M.ed, PHD





# மருதமுனை மக்கள் சார்பாக...

நற்பிட்டிமுனை முதன் மகனுக்கு மருதமுனை மக்களின் கண்ணீர் பூக்கள்.

ALM. பளீல் முஸ்லீம்களுக்கு வந்து வாய்த்த ஒரு சொத்து. இது செழித்து வரும் வேளையில் அழிக்கப்பட்டுப்போனமை எமக்கெல்லாம் ஒரு மாபெரும் இழப்பாகும்..

ஈடுசெய்ய முடியாத இப்பேரிழப்பு முஸ்லீம்களுக்காக மட்டுமல்ல முழு மனித இனத்திற்குமே வந்த ஒரு துரதிஷ்டமாகும்.

ஒரு எழுத்தாளனாக., பன்னூல் ஆசிரியராக, நல்லதோர் ஆசிரியராக, விரிவுரையாளராக,நிருவாகியாக, பத்திரிகையாளராக எல்லாம் முஸ்லிம்களுக்காக மட்டும் சேவை செய்தவரல்லர்.

அன்னாரது கடந்த கால சேவைகளில் இன வேறுபாடுகளுக்கு இடம் இருந்ததில்லை. எல்லோருக்கும் பொது மகனாக இருந்து ஆற்றிய சேவைகளை நினைக்கும் போதெல்லாம் உள்ளம் உருகாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்.

பிரச்சினைகளை அள்ளிக்கொண்டு வருகின்ற பொதுச் சனங்களுக்கு புன்முறுவலோடு பதிலளிக்கின்ற பாங்கு அன்னாருக்கு மட்டுமே கைவந்த கலை.

அன்னாரது இழப்பினை நினைவு கூறும் போதெல்லாம் தனது புனைப்பேரிலேயே பிறந்த மண்ணின் பெயரைச் சேர்த்துக்கொண்டமை அவரது கிராமமைப்பற்றை எடுத்துக்காட்டும் விடயமாகும்.

மருதமுனை மக்கள் கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது சஹிதாகிப்போன சுஹதாக்களின் ஜனாஸாக்களை எடுத்து வந்த போது பெருமனத்தோடு நல்லடக்கம் செய்ததற்கும் அகதிகளுக்கு அரவணைப்பும் ஆதரவும் கொடுத்த நற்பிட்டிமுனை மக்களுக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே தான் தனது கிராமத்தின் பெயரையே தனதாக்கிக் கொண்ட மர்ஹூம் ALM பளீல் அவர்களை அவரது கிராம மக்களோடு இணைந்து நாங்களும் நன்றியுடன் நினைவு கூறுவதுடன் அன்னாருக்கு இறைவன் சுவனபதி அளிப்பானாக. எனவும் பிரார்த்திக்கின்றோம்.

மருதமுனை மக்கள் சார்பாக
ARA **அஸீஸ்** (ஓய்வு பெற்ற பீடாதிபதி)
கல்வியற்கல்லூரி - அட்டாளைச்சேனை)

# நற்பிட்டிமுனை தமிழ் பிரிவிலிருந்து....

நற்பிட்டிமுனை நற்றமிழ் படைப்பாளி எனப்போற்ற,
கற்றவர் கல்வியாளனெனப்பாராட்ட...
கலைச்சுவை கொண்ட
நாவல், சிறுகதை, கவிதையை ஆக்கித்தந்த சான்றோன்,
அறிவியல் சார் நெறியில் நூலாக்க வல்லோன்
வெண்மை ஆடையில் வெள்ளை உள்ளம்,
கள்ளமில்லா புன்னகையில் கவர்ந்தோன்,
மக்கள் சேவையே மறைசேவையென வாழ்ந்தோன்,
ஆசிரியர் சேவையில் மாணவர் உளப்பாங்கின் பாணியில்
நல்லறிவு புகட்டியோன்.,
பிறந்தான் இறந்தான் என்ற இடைவெளியில் சிறந்த சிருஷ்டியாளன்,
பணியாற்றலுடையோன் என நிரப்பி
வானத்தமரன் வந்தான் காண் வந்ததுபோல்
வானத்தமரிடை சேர்ந்தான் எனப்போற்ற ஊன உடல் மறைந்தாலும் புகழுடல் மறையாத நற்பிட்டிமுனை பளீல் அவர்களுக்கு எனது இதயம் கசிந்த கண்ணீர் அனுதாபத்தை செலுத்துகின்றேன்.

அவரை இழந்த துயரில் மூழ்கிய மனைவி மக்கள் உறவினர்கள் நண்பர்கள் பிறப்புண்டேல் இறப்புண்டு இது இயற்கையின் நியதி என்பதை உள்ளத்தில் கொண்டு மன அமைதி பெற இறைவனிடம் இறைஞ்சி எனது அனுதாபச்செய்தியை சாற்றுகின்றேன்.

இப்படிக்கு

**ந.நல்லரெத்தினம்(கலைமானி)**
நற்பிட்டிமுனை





# நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவிலிருந்து....

புதிய சிந்தனைகளும்
புதிய மனப்பாங்குகளும்
ஒரு பிரகாசமான எதிர்காலத்தை
உருவாக்கும் என்ற
இலக்கணத்துக்கு
உதாரணமாய் திகழ்ந்த
ஏ,எல்.எம். பளீல் AGA அவர்கள்
துப்பாக்கிச் சூட்டுக்கு
இலக்காகி மரணமடைந்த
செய்தி கேட்டுத் தமிழ்
பேசும் நல்லுலகம்
கண்ணீரில் கரைந்தது.
காலத்தால் அழிக்க முடியாத
சிறந்த நூல்களை எழுதிய
அந்தக்கல்விமான்
இந்தப்பிரதேச மக்களுக்கும்
மனித சமுதாயத்தின்
மேம்பாட்டுக்கும்
உழைத்தவர்.
ஆற்றல் மிக்க ஆசானாக
வல்லமை மிக்கப்பிரதேச
செயலாளராக
உயர்ந்து நின்றவர்
போட்டிப்பரீட்சை எழுதி
AGA யாய் வந்த பளீல்
இந்த மண்ணுக்குக்
கிடைத்த மாபெரும் சொத்து .
2005.12.04 அன்று நற்பிட்டிமுனை
மண்ணுக்கு கரிநாள்
கண்ணீரால் இந்த மண்ணைக்
கழுவிய நாள்.

அவர் தொட்ட துறை
எதிலும் வெற்றி பெறாமல்
விட்டதில்லை
கலைஞனாய்
கவிஞனாய்
நாடறிந்த
எழுத்தாளனாய்
நல்ல குடும்பஸ்தனாய்
வாழ்ந்து மறைந்தார்
செந்தமிழை தேனாக்கி
விந்தை மிகு பாவாக்கியவர்
பளீல்
தமிழ் வாழும் வரை பளீலின்
நூல்கள் வாழும்
அவரின் நூல்கள்
வாழும் வரை பளீல்
வாழ்வார்.
அவர் புதவுடல்தான்
நம்மை விட்டுப்பிரிந்தது
அவருடைய புகழுடம்பு
நம்மோடு சங்கமித்திருக்கின்றது.
அவரின் ஜனாஸாவோடு
திரண்டு வந்த
சனசமுத்திரம்
அவரின் வினைத்திறன்களுக்குத்
தக்க சான்றாகும்.
அன்னாருக்கு அனுதாபச்செய்தி
எழுதும் பாக்கியத்தை
தந்த வல்ல பெரிய றப்புக்கு
நன்றி கூறுகின்றேன்.

தமிழாசான்
**காசிம் பாவா**
நற்பிட்டிமுனை.

# சாய்ந்தமருதிலிருந்து....

கடைசியாக காத்தான்குடியில்

கடைசியாக உனை
காத்தான்குடியில் சந்தித்த போது,
வாங்க சேர் என அழைத்து
அன்புடன் ஆதரித்து,
இருக்க வைத்து,
பூப்போல புன்னகைத்து,
இனிப்பாய்ப் பேசியதை
எண்ணிப் பார்க்கிறேன்.
படச் சுருளாய்.........
பல நிகழ்வு அசைகின்றது.

எதனையும் நீ
" இல்லை" யென்பதில்லை
செத்தும் கொடை கொடுத்த
"சீதக்காதி".

எதனையும் நீ
"இயலா" தென்பதில்லை
உலகை உசுப்பிய மாவீரன்
"நெப்போலியன்".

மக்களை நீ
"மனங்கோண" வைத்ததில்லை.
அரசியல் உலகில்
சாணக்கியன்.

எழுத்துலகில் நீ
புதியதொரு போக்கு
அதனால் உன்படைப்பு
பத்தாவது கோள்.

நற்பட்டிமுனையில் நீ
சீனத்துப்பட்டு
அதனால் உன்னை மக்கள்
"அருமை" என்றனர்.

இப்படிப்பட்ட உனை
எப்படி மறக்க முடியும்.
எப்படிப்பட்ட நல்லவன் நீ
அப்படிப்பட்ட உந்தனுக்கா
இப்படிப்பட்ட.......................
ஐயோகோ...........................

**மணிப்புலவர்**
**மருதூர் . ஏ. மஜீத்**





# முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் பணிப்பாளரிடமிருந்து....

வீர மரணம் அடைபவர்கள் இறந்தவர்கள் அல்ல

"ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுகித்தே தீரும்" என்ற அல் குர்ஆனின் கூற்றிற்கிணங்க உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் மரணம் என்ற தடையைத்தாண்டியே தீர வேண்டும். என்பது இறைவன் வகுத்த நியதியாகும். இந்நியதிக்கமைய காத்தான்குடியின் பிரதேச செயலாளராக கடமையாற்றிய சகோரதரர் ALM பளீல் மரணம் என்ற தடையைத்தாண்டியுள்ளார். இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மரணம் இயற்கை மரணம் என்றும் , வீர மரணம் (ஸஹாதத்) என்றும் இரண்டு வகைப்படும். இரண்டாவது வகையைச்சேர்ந்த வீர மரணம் அடைபவர்கள் அல்லாஹ்விடத்தில் பெரும் பாக்கியசாலிகளாகும். இவ்வகையான மரணம் பற்றி கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை "இறந்தவர்கள்" என்று திண்ணமாக நீர் எண்ண வேண்டாம். எனினும் (அவர்கள்) தங்களுடைய ரப்பிடத்தில் உயிருள்ளவராக இருக்கின்றனர்.-அவர் களுக்கு உணவும் வழங்கப்படுகின்றது.

அல்லாஹ் தன் கிருபையினால் அவர்களுக்கு வழங்கியவற்றைக் கொண்டு மகிழ்ச்சி அடைந்தவர்களாக இருக்கின்றனர். இன்னும் தங்களுடன் ( இன்னும் வந்து) சேராமல் தங்க ளுக்குப்பின் (உலகின் தம் நேசகர்களாக) இருப்ப வர்களைப்பற்றி நன்மாராயனம் கூறப்படுகிறது. அவர் களுக்கு எந்த வித அச்சமுமில்லை . அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

அல்லாஹ்வில் நின்றுமுள்ள நியமத்தை(நற்பேற்றை) கொண்டும், மேன்மையை கொண்டும் இன்னும் நிச்சயமாக அல்லாஹ் மு.்.மீன்களின் நற்கூலியை வீணாக்கி விடமாட்டான். என்பது கொண்டும் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தவர்களாகவும் இருக்கின்றனர்.
(அல் குர்ஆன் 3:169-171)

இலங்கை முஸ்லீம்களுக்கு 1980 களின் பின் ஏற்பட்ட துன்பியல் வரலாற்றில் இவ்வகையான ஸஹாதத் என்னும் வீர மரணங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இலங்கை நிருவாக சேவையை சேர்ந்த அரசாங்க அதிபர் மக்பூல், மேலதிக அரசாங்க அதிபர் அஹமட், உதவி அரசாங்க அதிபர்களாக இப்றாகீம், ஹபீப் முகம்மட், உஷ்மான் ஆகிய வீரமரணமடைந்த இலங்கை நிருவாக சேவை அதிகாரிகளின் வரிசையில் சகோதரர் அவர்களும் இடம் பெறுகின்றார்கள்.

மனிதன் என்ற வகையில் இலங்கை முஸ்லீம்கள் மிகவும் விரல் விட்டு எண்ணக்கூடிய நிருவாக அதிகாரிகளைக் கொண்ட சமூகம் என்ற வகையில் இத்தகைய இழப்புக்கள் முஸ்லீம் சமூகத்தை மிகவும் துயர் அடையச்செய்யும் நிகழ்வுகளாக காணப்படுகின்றன.

சில காலம் கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றும் போது பிரதேச செயலகத்தின் எனது சகாவாகவும் கிழக்கு மாகாணத்திலே பெரும் சனத்தொகையை கொண்ட மாநகர சபை ஆணையாளராகவும் பிரதேச செயலாளராகவும் அரைக்கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பல சவால்களுக்கு மத்தியில் திறமையான நிருவாக அதிகாரியாக தொடர்ந்து ஆற்றிய சேவையில், நிருவாக சேவையில் பிரவேசிக்கும் முன் அவர் ஆற்றிய கல்விச்சேவையும் கல்முனை பிராந்திய மக்களால் என்றும் மறக்கமுடியாத சேவைகளாகும்.

இத்தகைய ஆளுமைப் பண்புள்ள எனது அன்புச்சகோதரன் மரணிப்பதற்கு சில மாதங்களுக்கு முன் எனது காரியாலயத்திலும் மரணிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் கொழும்பிலுள்ள ஒரு கல்வி நிலையத்திலும் சந்தித்த சந்திப்பும், உரையாடல்களும் என்னால் மறக்க முடியாத நிகழ்வுகளாகும். இறைவனின் "கழாக்கதிர்" எனும் இறை நியதி நம்பிக்கையுள்ளவர்கள் என்ற வகையில் இறைவனின் கழாக்கதிரை பொருந்திக்கொண்டு அவர் விட்டுச்சென்ற கல்வி, கலை கலாச்சார, நிருவாக கனவுகளை நிறைவேற்றுவதுடன் அவருடைய மறுமை பேற்றுக்காக எல்லாம் வல்ல அலலாஹ்வை பிரார்த்திக்குமாறும் அவரின் பிள்ளைகள் குடும்பத்தார் அவர் நேசித்த நற்பிட்டிமுனை கிராம மக்கள் கல்முனை பிராந்திய மக்கள் போன்றோரின் நலனுக்காகவும் பாடுபட வேண்டுமென்றும் அவருடன் அன்புள்ள அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

**MI அமீர்**
பணிப்பாளர்
முஸ்லீம் சமய கலாசார பண்பாட்டு
அலுவல்கள் அமைச்சு
கொழும்பு





# மாவட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களின் சமூக நல சங்கத்திடமிருந்து...

இழக்க முடியாத இழப்பு
மர்ஹூம் ALM பளீல் அவர்களின் இறப்பு

கழங்கமற்ற முகமும் கற்பனை வளமும், நேர் சீர் கொண்ட நிர்வாகமும், தன்னகத்தே கொண்டு ஏழ்மை வாழ்க்கையில் இன்பம் கண்ட ALM பளீல் அவர்கள் வெண்ணிற உடை அணிந்து தன்னுள்ளத்தைக்காட்டியதே கொலையாளிக்கு உதவியாக இருந்ததுவோ.

கல்முனையில், காத்தான்குடியில், ஏன் அம்பாறையில் ஏழைகள் துயர் துடைக்க, துன்பம் கொண்டவர்களை தூக்கி விட அயராது பாடுபட்ட உமது திடீர் இழப்பு நம் அனைவரையும் ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியது. தன் மனைவி, மக்கள், குடும்ப உறவு,ஊர்மக்களின் தாங்கொணாத்துயரில் நாங்களும் பங்கெடுத்துப்பரிதவிக்கின்றோம்.

"நிச்சயமாக நாங்களும் அல்லாஹ்விடமே மீளக்கூடியவர்களாக இருக்கின்றோம்"

என்செய்ய விதியை ஏற்பது எம்மதத்திலும் உள்ளது என மனச்சாந்தி அடைவதைத் தவிர...

உனது இறப்பானது இறைபாதையில் உயிர்த்தியாகம் செய்தவர்கள் வரிசையில்தான் இருக்கப்போகின்றது எனத்திடமாக நம்புகின்றோம்.

ஜன்னத்துல் பிர்தௌஸ் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.. மனம்நொந்தவர் கேட்கும் துஆ இறைவனிடம் திரையின்றி ஏற்கப்படும்.

**அல் ஹாஜ் AA பாவா**
பணிப்பாளர். திட்டமிடல்
தலைவர்
மாவட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களின்
சமூக நல சங்கம்
திட்டமிடல் பணியகம் அம்பாரை மாவட்டம்.

## தென் கிழக்குப்பல்கலைக்கழகத்திலிருந்து....

பளீல் மனித நேயமிக்க ஒருவர்.

நற்பிட்டிமுனை பளீல் என்று இலக்கிய உலகில் அறியப்பட்ட இவர் மனித நேயமிக்க ஒருவராக செயற்பட்டவர்.

நண்பர் பளீல், தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விரிவாக்கற் கற்கை நிலையத்தில் இதழியல் கற்கை நெறியில் என்னோடு சக விரிவுரையாளராக கடமையாற்றியவர். நேரத்திற்கு வருவதிலும் தன்னுடைய கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதிலும் கரிசனையோடு செயற்பட்டவர்

பளீலிடம் பன்முக அறிவு வாய்ந்திருந்தது. அவர் இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக இருந்தாலும் அதற்கப்பால் அவர் பல்வேறு துறைகளில் செயற்பட்டவர். அரச போட்டிப்பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார் படுத்துவதில் அவர் முனைப்பாக செயற்பட்டார். அத்துறையில் பிரபல்யமான ஆசிரியராக தொழிற்பட்ட அதே வேளை அத்துறை சார்ந்த பல நூல்களை வெளியிட்டார். அவரால் பலர் பயன்பெற்று பல்துறைகளில் கடமையாற்றுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் அப்பால் கல்முனை பிரதேசத்தில் 1980களில் முக்கியமான எழுத்தாளராக பேசப்பட்டார். பல சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதிய அவர் அவற்றினூடாக சமூக இன அரசியல் யதார்த்தங்களை வெளிப்படுத்தினார்.

இவைகளோடு அவர் திறன்மிக்க நிருவாக சேவை அதிகாரியாகவும் செயற்பட்டார். கல்முனை காத்தான்குடி மக்களுக்கும் குறிப்பிடத்தக்க சேவைகளை ஆற்றிய அவரின் இழப்பு பேரிழப்பாகும்.

கல்முனை பிரதேசத்தின் நட்சத்திரமொன்று உதிர்ந்து விட்டது. என்பதை விட எழுத்துலகத்தின் நிலவு மறைந்து விட்டது என்றே கூறவேண்டும்.

அவரின் குடும்பம் நல்வாழ்வு பெறுவதற்கும் இறைவன் அவருக்கு பிர்தௌஸ் எனும் சொர்க்கத்தை அளிப்பதற்கும் இறைஞ்சுகின்றேன்.

**MA. முஹம்மது றமீஸ்**
விரிவுரையாளர்
தென்கிழக்குப்பல்கலைக்கழகம்





## கிழக்குப்பல்கலைக்கழகத்தில் இருந்து...

நினைவுகளில் தேடுகிறேன்.

பளீல் சேர்.

உங்கள் உறவை வலுவான இருப்பாக வாங்கிக் கொண்டவர்களில் நானும் ஒருவன்.

அந்த உறவு என்ன ? ஒரே ஊர்க்காரர்கள், றிஷாமின் வகுப்புத் தோழன் (அதனால் குடும்ப நண்பன்), உங்கள் மாணவன், எழுத்துலக உறுப்பினன்...

1983ஆம் ஆண்டு நான் 9ஆம் ஆண்டு படிக்கின்றேன். உங்கள் பல்கலைக்கழக விடுமுறைகளில் பாத்திமா கல்லூரியில் பிரத்தியேகமாக படிப்பிக்க வந்தீர்கள். அதுதான் நமது முதல் சந்திப்பு. ஒரு இசை நிகழ்ச்சியை ரசிக்கத்தயாராவது போல உங்கள் கற்பித்தலுக்கு எங்கள் வகுப்பு தயாராகும். உலக விடயம், நாட்டு நடப்பு, சினிமா, கவிதை , கதை எனப்பன்முகப்பட்டதாக உங்கள் கற்பித்தலின் இடைநிரப்பு வேலைகள் அமையும்.

இந்த ஈர்ப்புதான் உங்களையும் என்னையும் ஊன்றி உறவு கொள்ள வைத்தது. எனது எழுத்துக்களை உங்களிடம் தந்து அங்கீகாரம் கேட்டதிலிருந்து நீண்ட நம் நட்பின் நீட்சி தொடர்ந்தது.

நற்பிட்டிமுனையின் பொதுப்பணி, கல்விப்பணி, இரண்டுக்குமாக நீங்கள் உழைத்தீர்கள். கல்வித்துறையை றோணியோ யுகம் ஆக்கிரமித்த காலப்பகுதியில் அதனை முறையாகப்பயன்படுத்தி உங்களது வெளியீடுகள் வந்தன. ஒரு தனி மனித நிறுவனமாக நீங்கள் இயங்கினீர்கள். இது கிராமத்தின் மீதான நேசிப்புக்கும் சேவை நோக்குக்குமான எடுத்துக்காட்டுக்கள்.

நீங்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி முதல் நியமனம் பெற்ற போது தாவரவியல் ஆசிரியராக எங்கள் வகுப்புக்கு வந்தீர்கள். ஒரு நல்லாசிரியரின் பல்வேறு பண்புகளை உங்களிடம் காணமுடிந்தது. புதிய கற்பித்தல் உத்திகள் உங்களிடம் இருந்தது. ஆசிரியர் மாணவர் உறவில் இடைவெளி குறைந்தன. உங்கள் அணுகுமுறை, உற்சாக மிக்க கற்பித்தல் உங்களை எங்களிடத்தில் பதித்தது.

இன்று நீங்கள் இல்லை. உங்கள் திடீர் மறைவு எங்கள் இதயங்களை உறையச்செய்தது. நம்பமுடியாததும் ஏற்றுக்கொள்ள வொண்ணாததுமாக உங்கள் இழப்பு கனத்தது. நிரப்ப முடியாத இடைவெளியாகத் தெரியும் உங்களின் வெற்றிடம் நெஞ்சில் கனலாகத்தைக்கிறது.

உங்கள் மறைவினால் துன்புற்றிருக்கும் உறவுகளுக்கு எங்கள் ஆறுதலைச் சொல்வது தவிர வேறென்ன முடியும் நம்மால்.....

**சஞ்சீவி – சிவகுமார்**
உதவிப்பதிவாளர்
கிழக்குப்பல்கலைக்கழகம்





# கல்வியற்கல்லூரியிலிருந்து....

பண்பாளன் பளீலின் பதிவுச் சுவடுகளிலிருந்து.

மர்ஹூம் ஏ.எல்.எம். பளீல் அவர்களின் நினைவையொட்டி வெளியிடவுள்ள அனுதாப மலர் வெளியீட்டை முன்னிட்டு அவர் பற்றிய சில மனப் பதிவுகளை வெளியிடுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

2005 ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்தில் அனர்த்தங்களினதும் அழிவுகளினதும் ஆண்டு என பலராலும் மொழியப்படுகின்றது. இலங்கை கூட அதற்கு விதிவிலக்காக அமைந்துவிடவில்லை. இலங்கையில் நடைமுறையிலிருந்து வந்த சமாதான சூழ்நிலை சீர் குலைந்து உத்தியோகப் பற்றற்ற முறையில் நிழல் யுத்தம் மூழத் தொடங்கியது. இவ்வாண்டில் தான் இதன் தாக்கம் ஆயுதம் தரிக்காத அப்பாவி அறிஞர்களையும் விட்டு விடவில்லை. இந்த வகையில் 04. 12. 2005 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை அன்று சரித்திரம் மறவா சங்கதி நிகழ்ந்த ஒரு துரதிஷ்ட வசமான நாளாகும். இத்தினத்தில் தான் எனது இனிய நண்பர் அஷ்ஷஹீத் ஏ.எல்.எம். பளீல் அவர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டார். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன்.)

மர்ஹூம் ஏ.எல். எம். பளீல் அவர்களின் இழப்பு கல்வியியலாளர்கள், புத்திஜீவிகளுக்கிடையில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் மூளைசாலிகளுக்கிடையில் பயத்தையும் பதற்றத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

அறிவும், ஆற்றலும், எளிமையும் இங்கிதமும் பண்பாடும் பக்குவமும் சாந்தமும், சகிப்புத் தன்மையும், பூப்போல புன்னகையும், புகழ் பெற்ற எழுத்துப் பணியும், அன்பும், அழகுணர்வும் ,பாற்போல இதயமும் பண்முக ஆளுமையும் அவர் பெற்றிருந்த நீங்காச் சிறப்பியல்புகளாகும்

நிருவாகத் திறமை மூலம் தான் கடமையாற்றிய பிரதேச ஏழை எளிய மக்களுக்கு செய்து கொடுத்துள்ள வரப்பிரசாதங்களும், கல்வி உலகுக்கு அவர் வழங்கியுள்ள கல்வி சார் வெளியீட்டுப் பொக்கிஷங்களும் நிச்சயம் அவர் ரூஹ் சாந்தி பெற துணை நிற்கும். என எதிர்பார்க்கின்றேன்.

வல்ல அல்லாஹ் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சகல சௌபாக்கியங்களையும் அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**ஏ.எல்.எம். றஸூல்**
பீடாதிபதி
தேசிய கல்வியற் கல்லூரி, அட்டாளைச்சேனை.

# அரசினர் ஆசிரியர் கலாசாலையிலிருந்து....

இலங்கை நிருவாக சேவையில் சேர்ந்த A L M. பளீல் அவர்கள் பிரதேச செயலாளராக இருந்து சமூகத்திற்கும் நாட்டிற்கும் நிறைந்த சேவையைச் செய்துள்ளார். இதற்காக என்றும் அவர் நினைவு கூரப்பட வேண்டியவராகும்.

முஸ்லீம் சமூகத்திலுள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய நிருவாக அதிகாரிகளுள் சிரேஷ்ட நிருவாக அதிகாரியை இவ்வாறு இழக்க நேர்ந்தது துரதிஷ்டவசமானது.

எதிர்காலத்தில் இன்னும் பல பளீல்கள் உருவாகி இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் சேவையாற்ற வல்ல அல்லாஹ்வை வேண்டுகின்றேன். ஜனாப் பளீல் அவர்களுக்கு அல்லாஹ் அவரது பாவங்களை மன்னித்து ஜன்னத்துல் பிர்தௌஸை நல்க பிரார்த்திக்கின்றேன்.

MS. **அப்துல் ஹபீல்** (SLEAS)
அதிபர்,
அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை
அட்டாளைச்சேனை





# கல்முனை மாநகர சபையிலிருந்து....

மானுடம் சாகாத வரை....

அது
என்
பல்கலைக்கழகக் கற்கையின்
இறுதிக்காலப்பகுதி.
இனப்பிரச்சினையின் கோரப்பல் பதிந்த
எண்பதாமாண்டுக்காலப்பகுதி.
யாழ்பல்கலைக்கழகத்திலிருந்து
என் சகோதரனுடன்
ஊர்நோக்கிப் பயணிக்கின்றேன்.
பஸ்.........
பெரிய நீலாவணையுடன் தன்
பயணத்தை நிறுத்திக்கொள்கின்றது.
பசியும், பயமும்
வயிற்றையும், மனதையும் கிள்ள
நாங்கள் இருவரும்
நடந்தே வருகின்றோம்.
தூரத்தில் இரு ,
துவிச்சக்கரவண்டிகள்
எமை நோக்கி வருகின்றன.
வந்தவர்கள் எங்கே செல்வதாக
எம்மிடம் கேட்டனர்.
கல்முனை
என்றோம்.
எம்மைத்தங்கள் துவிச்சக்கர வண்டிகளில்
சுமந்து சென்று
கல்முனை பஸ் தரிப்பிடத்திற்கு
கொண்டு வந்து சேர்த்தார்கள்.
அவ்வேளை நாம்
எங்களுக்குள் பரஸ்பரம் பேசிக்கொண்டபோதுதான்
என்னைச்சுமந்து வந்தவர்
தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

நற்பிட்டிமுனை பளீல் என்று.
இந்நிகழ்வின் பின்
ஆங்காங்கே சந்தித்துக்கொள்ளும் போது மட்டும்
சிறிய உரையாடல்கள்,
புன்னகைகள் மட்டும்
எங்களுக்குள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.
மீண்டும்
தொண்ணூறுகளின் ஆரம்பப்பகுதி
SLAS பரீட்சைப்பெறுபேறுகள்
அறிவிக்கப்படுகின்றன.
அதில்
நாங்கள் இருவரும் சித்தியடைந்த விடயம் தெரியவந்து
மீண்டும்
பரஸ்பரம் பேசிக்கொள்கின்றோம்.
இறைவனின் கிருபை
பயிற்சிக்காலத்தின் போது
எம்மிருவருக்கும் ஒரே விடுதி அறை கிடைக்கிறது.
அன்றிலிருந்து
எம் உறவின் பிணைப்பு இறுகி
உற்ற தோழர்களாகி விட்டோம்.
பளீல்
வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத
அழகும், ஆளுமையும் கொண்டவன்
சிறுவயதிலிருந்தே
பரோபகாரசிந்தை கொண்ட பண்பாளன்.
வாசிப்பு
இவனின் வாழ்க்கைத்துணைவி
எழுத்து
இவனின் இதயத்துடிப்பு
இவை இரண்டிற்காகவுமே
இவன்
அச்சகமும் நூலகமும்
நடத்தியவன்.





மச்சான் சலீம்
ஒரு நாள் நான் ஏதாவது எழுதா விட்டால்
என் தலை வெடித்து விடும்
என்று கூறும்
எழுத்துப்பித்தன்.
பளீலின்
பரிணாம வளர்ச்சி
ஆரம்பத்தில்
ஒரு தாவரவியல் ஆசான்
ஆனால்
அன்றைய கால கட்டத்தில்
அவன்தான்
அத்துறையில் கொடிகட்டிப்பறந்தவன்.
அடுத்து
உதவிப்பிரதேச செயலாளர்,
பிரதேச செயலாளர்,
இவற்றிலும்
இவனது ஆளுமையை
சிறப்பாக நிலைநாட்டியவன்
பளீல்
சிறந்த கதையாசிரியன்,
சிறந்த கவிஞன்,
சிறந்த விமர்சகன்,
சிறந்த கல்வியியலாளன்,
சிறந்த நிர்வாகி,
எல்லாவற்றையும் விட
மிகச்சிறந்த மனிதன்
மானுடம் சாகாத வரை
பளீல்
மனதுகளில் வாழ்ந்து கொண்டே
இருப்பான்

M.Y. **சலீம்**
மாநகர ஆணையாளர்
கல்முனை

# கல்முனை பிரதேச செயலகத்திலிருந்து....

கடந்த 2005.12.02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் படுகொலை செய்யப்பட்ட எனது அன்பு நண்பரும், காத்தான்குடி பிரதேச செயலாளருமாகிய ALM பளீல் அவர்களின் மறைவையொட்டி நடைபெறுகின்ற நினைவு நிகழ்வின் போது எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தின் கல்முனை பிரதேசத்தில் அமைந்துள்ள அனைவராலும் மதிக்கப்படுகின்ற நற்பிட்டிமுனைக்கிராமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மர்ஹூம் பளீல் அவர்கள்தனது ஆரம்பக்கல்வியை சொந்தக்கிராமத்திலும் அதனைத்தொடர்ந்து கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியிலும் கல்வி பயின்று பட்டப்படிப்பினை கிழக்கு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட விஞ்ஞான பட்டதாரி ஆவார்.

சில காலங்கள் ஆசிரியராக பணிபுரிந்த அவர் பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் உயர்வுக்கு ஏணிப்படியாக விளங்கியதோடு அரசாங்க நிர்வாக சேவையில் தன்னை இணைத்துக் கொண்டார். அத்துறையிலும் கடமை, கண்ணியம், காருண்ணியம், காத்து தனது பணியை இறுதி வரை செவ்வனே சிறப்பாகக் கொண்டு சென்ற ஒரு கடமை வீரனாகவே அவரை நான் கண்டேன்.

பலதரப்பட்ட சவால்களுக்கும் பல முனைகளிலும் ஏற்படும் இடையூறுகளுக்கும் மத்தியில் எதிர் நீச்சல் போட்டு சாதுரியமாக கடமையாற்ற வேண்டிய எமது கல்முனை பிரதேசத்தில் சுமார் 12 வருட காலங்கள் துணிச்சலுடனும் விவேகத்துடனும் கடமையாற்றிய நண்பர் பளீல் அவர்கள் இப்பிரதேசத்தின் பல்லின மக்களினதும் மனங்களில் இடம் பிடித்துக்கொண்டவராவார்.

அன்னார் கடமை ரீதியான வேலைப்பழுக்கள் மத்தியிலும் ஏனைய பல துறைகளிலும் ஈடுபாடு கொண்ட ஒரு புலமையாளராக விளங்கினார். தலை சிறந்த நூலாசிரியராகவும், ஊடகவியலாளராகவும், கதா ஆசிரியராகவும், ஒரு கலைஞனாகவும் அவர் திகழ்ந்தார்.





கல்வி மான்கள் பலர் உருவாக வேண்டுமென்பதற்காக தனது அறிவாற்றல்களை மாணவர் சமுகத்தின் வளர்ச்சிக்காக பெரிதும் செலவிட்ட மர்ஹூம் பளீல் அவர்கள் என்றும் நினைவு கூறப்பட வேண்டியவர்.அவர் மறைந்தாலும் அவரின் கடமை ரீதியான சேவைகளுடன் அறிவுப்பசி தீர்க்க அவரால் பிரசவிக்கப்பட்டுள்ள நூல்கள் எமது சமுகத்தின் மேம்பாட்டில் உயர்ந்து நிற்கும் என்பது திண்ணம். புலமைப்பரிசில் வழிகாட்டி , பொதுஅறிவு போட்டிப்பரீட்சைகளுக்கான நுண்ணறிவு போன்ற நூல்களை காலத்திற்கு காலம் வெளியிட்டு வந்தது மட்டுமன்றி தேவையேற்படும் பட்சத்தில் பல கல்விக்கருத்தரங்குகளையும் நடத்தி வந்தார். மேலும் பல சிறுகதைத் தொகுதிகளையும், வெளியிட்டு நாடறிந்த பல எழுத்தாளர்களினதும் வாசகர்களினதும் பாராட்டுக்களையும் அவர் பெற்றுக் கொண்டார்.

மர்ஹூம் பளீல் அவர்கள் எம்மோடு புன்னகை விளங்க உரையாடும் விதம் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்களை வழிநடாத்தும் திறன் கடமையில் நேரம் தவறாமை போன்ற இன்னோரன்ன சிறப்பம்சங்களையும் கொண்ட துடிப்புள்ள அதிகாரியாவார்.

காத்தான் குடி பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுச்சென்ற நண்பர் பளீல் அவர்கள் தான் மரணிக்கும் வரை சிறந்த முறையில் கடமையாற்றி அப்பிரதேச மக்களின் மனங்களையும் வெற்றி கொண்டார் என்பதை அன்னாரின் நல்லடக்கத்தின் போது திரண்டிருந்த காத்தான் குடி பிரதேச மக்கள் வெள்ளம் சான்று படுத்தியது. அன்னாரோடு பழகிய காலங்களை மீட்டிப்பார்க்கும் போது கண்கள் பனிக்கின்றன.

மர்ஹூம் ALM பளீல் அவர்களின் பெற்றோர், மனைவி மக்கள் ,உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் எல்லாம் வல்ல இறைவன் அன்னாரை பிர்தௌஸ் எனும் சொர்க்கத்தில் நுழையச்செய்ய வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

**A.H.M அன்சார்**
பிரதேச செயலாளர்,
கல்முனை

# கிராம சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து...

கடந்த 02.12.2005 வெள்ளிக்கிழமை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான எமது காத்தான்குடி பிரதேச செயலாளர் மர்ஹூம் ALM பளீல் SLAS அவர்கள் 04.12. 2005 இல் அகால மரணமடைந்தார்கள். "இன்னாலின்னாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்."

இவரது பிரிவை ஒட்டி துயருரும் அன்னாரின் குடும்பத்தார்கள் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் எமதூர் மக்களுடனும் காரியால உத்தியோகத்தர்களாகிய எங்களுடனும் இரண்டறக்கலந்து எமது துன்ப துயரங்களில் பங்கு கொண்ட மர்ஹூம் பளீல் பிரதேச செயலாளர் அவர்களின் இழப்பு மூவின மக்களுக்கும் பொது இழப்பாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர் சுவனபதியை வழங்கி கௌரவிப்பானாக. ஆமீன்

இவ்வண்ணம்

**கிராம சேவை உத்தியோகத்தர்கள்**
**பிரதேச செயலகம்,**
**காத்தான்குடி.**





# கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்திலிருந்து...

நற்பிட்டிமுனை பளீல் என் நெஞ்சில் நிறைந்தவர்

பிரதேச செயலாளர் பளீல் அவர்கள் எம்மை விட்டுச் சென்றாலும் அவர் விட்டுச் சென்ற சுவடுகள் இன்னும் எம்மை விட்டு நீங்கவில்லை. அவருடைய இழப்பு சமூகத்திற்கு ஒரு பேரிழப்பாக இருந்தாலும் அவர் உருவாக்கிய கல்விச் சமூகம் மேலும் பல பளீல்களை உருவாக்கும்., உருவாகியுள்ளது என்றால் அது மிகையாகாது. அவர் மூலம் உருவாக்கப்பட்ட மாணவர்கள் அவருடைய வெற்றிடத்தை நிரப்பி விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அவர் ஒரு சிறந்த நிர்வாக சேவை அதிகாரி என்பதற்கு மேலாக ஒரு சிறந்த ஆசானாக, சிறந்த ஒரு கவிஞனாக, சிறந்த ஒரு எழுத்தாளராக, பல்லறிவு பெற்ற ஒருவராக ஒரு பல்கலை வேந்தராகத் திகழ்ந்தார்.

நான் நிர்வாக சேவையில் இணைந்த பின்னரே அவருடன் அதிகம் பேசி பரீட்சயம் ஆகியிருந்த போதிலும் , நான் நிர்வாக சேவையில் இணைய முன்னரே அவரை ஒரு சிறந்த உயிரியல் ஆசிரியராகவும், சிறந்த கவிஞராகவும் அறிந்திருந்தேன்.அவருடைய சிறப்பான பல கவிதைகளையும், பல நெஞ்சை உருக்கும் சிறுகதைகளையும்வாசித்து இன்புற்றுள்ளேன். இதற்கு மேலாக அவர் எழுதியுள்ள பொது அறிவு, நுண்ணறிவு நூல்கள் தொழில் வாய்ப்புப் பெற்று பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பலருக்கு உதவியாக, உந்துசக்தியாக அமைந்திருந்ததை யாராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

இதற்கும் மேலாக ஒரு சிறந்த சிந்தனையாளராகவும், பல்கலைக்கழகத்தில் ஒரு போதனை ஆசிரியராகவும் தான் பெற்ற அந்தக் கல்விப் பயனை மற்றையவர்கட்கும் புகட்டி இன்புற்றுள்ளார். என்றுமே அன்றுமலர்ந்த செந்தாமரைமுகத்துடனே பவனி வந்ததுடன் தன்னை நாடிய மக்களுக்கு சிறப்பான சேவையை நல்கியவர். என்றாலும் அது சாலவும் பொருத்தமானதே. நற்பிட்டிமுனை பளீல் என்றால் அவரை யாவருமே அறிவார்கள் அதே போல் அவருடைய கல்விச் சேவையையும், சமூகச் சேவையையும் மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள். பல்வேறு சேவைகளைச் செய்து எங்கள் மத்தியிலிருந்து இவர் பிரிந்து சென்றாலும் அவர் விட்டுச் சென்ற மைல் கற்கள் அவரை எம்மிலிருந்து பிரித்து விடாது. எம்மிடமிருந்து பிரிந்தாலும் பிரியாமல் வாழும் அவருடைய நினைவுகளை மீட்ட சொற்களே போதாது. எனலாம். எனவே அவருடைய சேவையின் பயனால் அவருடைய ஆத்மா சாந்தியடைவதுடன் அவருடைய குடும்ப உறுப்பினர்களும் சுகமாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் நினைவுடன்
நண்பன்
**வ. வாசுதேவன்.**
உதவி பிரதேச செயலாளர்கல்முனை தமிழ் பிரிவு.

# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திலிருந்து....

மறக்கமுடியாத நண்பன் ALM பளீல்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என குறள் கூறும் நட்புக்கு இலக்கணமாய், நேர்த்திமிகு ஆசானாய், சிறந்த நிருவாகியாய் எனது இன்னுயிர் நண்பன் வாழ்ந்த வாழ்க்கையை நினைக்கும் தோறும் விழிகளில் கண்ணீர் நிறைகின்றது.

தனது இனிய புன்னகையால் நண்பர்களை கொள்ளை கொள்ளும் பாங்கினை வர்ணிப்பதற்கு வார்த்தைகளை இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றேன்.

தனது உத்தியோக கடமைகளை நேர்மையாக, நேர்த்தியா மேற்கொண்டார். கற்றோரையும், சராசரி வாசகனையும் கவரும் விதத்தில் சமூக அவலங்களை தான் பரிணமித்த இலக்கிய புலத்திலே உலவவிட்டார். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பொன்னுரைக்கு அமைய உத்தியோகத்தர்களுக்கான உயர்வு பரீட்சை வழிகாட்டிகளை நூல் உருவில் கொணர்ந்து தன்னைப்போன்று மற்றவரும் உயர வேண்டுமென்ற நல்லெண்ணத்தை நிரூபித்தார்.

என்னுடன் 15 ஆண்டுகள் அன்பினால் பிணைந்திருந்த நண்பன் பளீல் நிருவாகம், இலக்கியம், அறிவுரை, மனித நேயம் இனிய நட்பு போன்ற பல துறைகளில் முத்திரை பதித்து விட்டு மீளாத்துயில் கொண்டமை இறைவனின் நாட்டம் என திடப்படுத்திக்கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய நிதமும் பிரார்த்திக்கும்
இனிய நண்பன்

**ILM, சம்சுதீன்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
அக்கரைப்பற்று





# சம்மாந்துறை பிரதேச செயலகத்திலிருந்து....

கடந்த 2005.12.04 ஆம் திகதி அகால மரணமடைந்த பிரதேச செயலாளர் ALM பளீல் அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது கிழக்கு பிரதேசம் மட்டுமல்லாது முழு இலங்கையும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்ததை நாம் அறிவோம். மர்ஹூம் ALM பளீல் அவர்களோடு எனது முதல் நியமனமான 1996 ஜனவரி தொடக்கம் 1996 ஏப்ரல் மாதம் வரை உதவி பிரதேச செயலாளராக கல்முனை பிரதேச செயலகத்தில் கடமையாற்ற கிடைத்தமையை நான் பாக்கியமாக கருதுகின்றேன்.

மர்ஹூம் ALM பளீல் அவர்கள் கடமையில் மிகவும் கண்ணியமும், கடமையுணர்வும் கொண்டவர். காரியாலயத்தில் சக உத்தியோகத்தர்களுடனும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகி மக்களின் உள்ளத்தில் இடம் பிடித்தவர். இதன் காரணமாக மிக நீண்ட காலம் சுமார் 10 வருடத்திற்கு மேல் கல்முனையில கடமை மேற்கொண்டவர். அதிகமான நேரம் காரியாலயத்திலிருந்து வேலை செய்பவராகவும் தமது ஓய்வு நேரங்களை ஆக்கபூர்வமான கட்டுரைகள் எழுதுவதிலும் தமது அறிவை வளர்த்துக்கொள்வதிலும் மிகவும் அக்கறை கொண்டவராகவும் இருந்ததால் இவரது வாகனம் மாதிரி நூல் நிலையமாகவே எனக்கு காட்சியளித்தது. வெள்ளை ஆடை அணிந்த இவரது மனமும் வெண்ணிறமாக காணப்பட்டதாக நான் அறிந்தேன்.

எனது நிருவாக வாழ்க்கையில் இவரிடமிருந்து பல நிருவாக யுக்திகளை கற்றுக்கொண்டேன். இவர் விஞ்ஞானத்துறையில் மட்டுமல்ல கலை, கலாச்சார நிருவாகத்துறையிலும் பாண்டித்தியம் பெற்றவராகவும் நல்லதோர் ஆசானாகவும் இருந்து பல நூற்றுக்கணக்கான மாணவர்களை பல்கலைக்கழகம் செல்லவும் பல உயர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை வழிகாட்டி நூல்களை எழுதி அவர்களது உயர்வுக்கு வழிகாட்டியவருமாவார்.

அன்னாரது பிரிவு என்றும் எப்போதும் ஈடுசெய்ய முடியாதொன்றாகும். இச்சந்தர்ப்பத்தில் அன்னாரது பிரிவில் வாடும் அன்னாரது மனைவி பிள்ளைகள் குடும்பம் உற்றார் உறவினர் அன்பர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அன்னாரது சேவைகள் விட்டு சென்ற இடத்திலிருந்து அவரது முன்மாதிரியை பின்பற்றி நாம் தொடர்ந்து பாடுபட வேண்டுமென்று வினயமாக கேட்டுக்கொள்வதுடன் ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சொர்க்கத்தை இறைவன் வழங்க வேண்டுமென நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக , ஆமீன்

**MM நஸீர்**
பிரதேச செயலாளர் சம்மாந்துறை

# காத்தான்குடி பிரதேச செயலகத்திலிருந்து....

எனது அன்புக்குப்பாத்திரமானவர் மர்ஹூம் ALM பளீல் அவர்கள். அவரோடு நான் இணங்கிக் கழித்த நினைவுகள் என்னை விட்டு பிரியாது.

இன்பமாக கழித்த காலத்தை விட அவருக்குத் துன்பம் ஏற்பட்ட போதெல்லாம் மனம் விட்டுக்கதைக்கவும், மானசீகமாக உதவவும் உடன் பிறவா சகோதரனாக என்னை அவர் தெரிந்தெடுத்திருந்தார். அது எனக்கு கிடைத்த பாக்கியம்.

விளக்கு ஒளிரும் போது இருட்டின் நினைவு வருவதில்லை. அது மனித இயல்பு. விஞ்ஞானக்கல்வியையும் விரிவான பாட போதனைகளையும் புகட்டும் ஒரு ஆசானாகவே உலகை விட்டு பிரியும் வரை தன்னை இனங்காட்டிக் கொண்ட கல்வி மான் விரைவாகவும் சரியாகவும் முடிவெடுக்கும் ஒரு சிறந்த நிருவாகி ஆவார்.

கல்முனை பிரதேச செயலகத்தில் நான் பணியாற்றிய காலத்தில் எனது ஆற்றலை சரியாக மதிப்பீடு செய்து காழ்ப்புணர்வு கொண்டவர்களை புறந்தள்ளி பொருத்தமான கதிரையை எனக்களித்து என்னை சரியாக இனங்கண்ட முதல் மகன். இப்பெருமகன் தெரிவு சரியானதென்பதை நான் இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்தியடைந்ததும் தான் ALM பளீல் அவர்கள் ஒரு தீர்க்கதரிசனம் மிக்கவர் என்பதை காழ்ப்புணர்வு மிக்க உள்ளங்கள் உணர்ந்து கூசிக்குறுகின.

நான் இடைவெளி நிரப்பி நிற்கும் இந்தக்கதிரையை அவர் உயிரோடு இருக்கும் போதே என்னை அழைத்து அந்த இடத்தைப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். நான் இடமாறிச் செல்லப்போகின்றேன் எனக்கூறிய வார்த்தைகள் என்னை கண்கலங்கச்செய்கின்றன. கல்முனை பிரதேச செயலகத்திற்கும் பிரதேச மக்களுக்கும் தெரியும் பளீல் அவர்களின் பிரிவால் பிரிவுத்துயர் தாங்க முடியாமல் மிகத்துடித்துப்போன உடன் பிறவா சகோதரன் இந்தக் காத்தான்குடி பிரதேச செயலாளர் அன்சார்தான் என்பது.

அதே எனக்கு...





பிரிவு எங்கு நடந்ததோ, அந்தச்செயலகமும் எந்தக்கதிரையில் அந்த உயிர் பறிக்கப்பட்டதோ, அந்தக்கதிரையும் துப்பாக்கி ரவைகளின் தழும்புகள் ஒவ்வொரு கணமும் என் கண்முன் காட்சி அளிக்க அவர் புரட்டிய கோவைகளை நானே புரட்டிக்கொண்டிருக்க என்னுள்ளம் எப்படி துடிதுடிக்கும்..இது என்ன சோதனை.

காத்தான்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மட்டக்களப்பு அரச அதிபர் , மேலதிக அரச அதிபர், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மட்டுமல்ல காத்தான்குடி வாழ் மக்கள் அனைவருமே மர்ஹூம் பளீல் அவர்களின் இறப்பு மனித நேயமுள்ள அன்புள்ளத்தின் இறப்பாகவே கருதி கண்ணீர் விட்டு புலம்புவதை என்னால் சதா அவதானிக்க முடிகின்றது. இதிலிருந்து மக்களின் மனதை அவர் வென்றெடுத்துள்ளதை கண்டு நான் கண் கலங்கு கின்றேன்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் என்ற அடிப்படையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், காத்தான்குடி பொதுமக்கள் சார்பாக எனது ஆழந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சொர்க்கத்தை வல்ல அல்லாஹ் அருள வேண்டு மென இறைஞ்சுகின்றேன்.

MC **அன்சார்**
பிரதேச செயலாளர்
காத்தான்குடி

# என் காதலனுக்கு.... கடைசி வரிகள்தாம்.

கரையோர வானத்தின் சூரியன் பறிக்கப்பட்டு இந்தப் பிரதேசம் இருட்டுக்குள் தள்ளப்பட்ட அந்த வேளையில் உங்களை ஓடி வந்து பார்க்காமல் என்னால் உக்கார முடியவில்லை.

மட்டக்களப்பு ஆதாரவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் உங்கள் இறுதிப் படுக்கையில் ஆயிரக் கணக்கான மக்களுக்கு மத்தியில் ஒரு ரோஜா மாலையாய் கிடத்தப்பட்டிருந்தீர்கள்.

உங்களை தொட்டுப்பார்க்க நினைத்து தொட முடிந்த தூரம் வந்தும் தொட முடியாமல் நின்றேன்.

எனது பளீலுக்கு மரணமா.....?

எனக்கு முதன் முதலில் மரண பயம் வந்தது.

காற்று - சமுத்திரம் - வானம் - பளில் இவைகள் எல்லாம் மரணிக்க முடியாதவை என்று எனது கிராமத்து மக்களைப்போல நானும் நம்பியிருந்தேன்.

அன்று எனது நான்காவது நம்பிக்கை சரிந்து விட்டது 88 முதல் 2005 வரை பதினேழு வருட காலம் அனை வரும் படித்து பயன் பெறும் இருபத்து ஐந்து புத்தகங்களில் ஒரு வார்த்தயாய் இருந்த பளீல் எனும் பெயரை துப்பாக்கி றவைகள் அழிதது விட்டதா?

இமைக்காமல் கிடந்த உங்களை இமைக்காமல் பார்த்தேன்.

அப்போதும்கூட உங்கள் புன்னகையை பரிசாகத்தந்தீர்கள்.

நீண்ட நேரம் உங்களை அவ்விடத்தில் இருக்க அனுமதிக்க வில்லை.

சட்டென்று நகர்த்தினார்கள் ஆப்பிரேசன் அறைக்குள்

என்னால் விளங்கிக் கொள்ள முடிய வில்லை, இறப்பாரா? அல்லது பிழைப்பாரா? என்று

அவர்களால் முடியவில்லை

அனுப்பினார்கள் மறுநாள் மாலை ஆகாயமார்க்கமாக அப்பலோ வைத்தியசாலைக்கு





அவர்களும் கைவிரிக்கவே....

பிறந்த ஊருக்கு இறந்த செய்தியோடு பறந்தே வந்தார் படையினரின் பாதுகாப்போடு.

ஞனத்திரள் என்னை பிதுக்கியது

அங்கே அனைத்து மக்களும் அழுது கொண்டிருந்தார்கள். நிஜக் கண்ணீர் வடித்து அங்கே உயிரை கண்ணீரால் ஒழுக விட்டு நின்றார்கள்.

நான் ரசித்துக்காதலித்த உனக்கா மரணம்? என்று எனக்குத் தெரியாமல் என் நாக்கு உச்சரித்து கொண்டிருந்தது.

அங்கே கூடியிருந்த பலர் உங்களை சுட்டவர்கள் பற்றியே தர்கித்துக் கொண்டிருக்க நானோ உங்கள் நேற்றுக்களை நினைத்தே விக்கித்துக் கொண்டிருந்தேன்.

நிருவாக சேவையில் இருந்து கொண்டு - எழுத்தின் மீது காதல் - வந்து சேரும் நேரங்களை சிந்தாமல் பயன்படுத்திக் கொண்ட செம்மை இருபது வயதுக்கு மேல் வாழ்க்கையின் சந்திரோதயம் முப்பது வயதுக்கு மேல் சூரியோதயம் - படபடவென்று வளர்ச்சி - மனித நேயம் எனனும் மாட்சி - சேவையில் இருந்து கொண்டு எழுத்து - எழுதிக் கொண்டு சேவை அப்பப்பா என்ன வளர்ச்சி உங்கள் வளர்ச்சி.

இருபது வயதில் என்னைத்தூங்க விடாமல் செய்தது காதல்.

இருபத்தி மூன்று வயதில் என்னைத் தூங்க விடாமல் செய்தவர் நீங்கள்.

வாழ்க்கையிலும் கனவுகளிலும் நான் கற்பனை செய்து வைத்திருந்த மனிதன் நீங்கள்தான்.

நீங்கள் புன்னகை செய்யும் போது நான் விழித்தேன் உங்கள் வெகுளிப் பேச்சில் வசமிழந்தேன்.

உங்கள் படைப்புகளில் நானும் ஒரு வார்த்தையுமாய் நானும ஒரு வாத்தியமாய் ஆனேன்.

உங்கள் உடை அலங்காரத்தில் - சிகை அலங்காரத்தில் நான் கரைந்து போனேன்.

பிரமிக்கமட்டுமே தெரிந்த அந்த இளம் வயதில் எனக்குள் கனவுகளை பெருகவிட்டதிலும், கற்பனைகளை திருகி விட்டதிலும் உங்கள் ''மெல்லச்சாகும் வாலிபம்'' தொகுப்புக்கு பெரும் பங்கு உண்டு என்பதை நான் ரகசியமாய் வைத்திருக்க விரும்பவில்லை.

அந்தப் பாதிப்பு எனக்கு மட்டும் இல்லை.

என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

நீங்கள் மந்திரத்தால் மாங்காயோ, தந்திரத்தால் தேங்காயோ தருவித்தவரில்லை.

இந்த மண்ணில் எங்கள் மனிதர்கள் சில நூற்றாண்டுகளாக எதை இழந்து விட்டு நின்றார்களோ அதையே நீங்கள் தோண்டியெடுத்து படைத்துக் கொடுத்தீர்கள்.

பொது அறிவை ஒரு கண்ணாகவும், உளர்ச்சார்பை ஒரு கண்ணாகவும், மக்களின் எதிர்பார்ப்பை நெற்றிக் கண்ணாகவும் கொண்டவர் நீங்கள்.

எமது மரபுப்படி தந்தையின் பெயரை இனிஷியலாக கொள்வார்கள் ஆனால் நீங்களோ பிறந்த மண்ணை வெளியே கொண்டுவர எமது ஊரின் பெயரைத்தான் இனிஷியலாகக் கொண்டீர்கள் ''நற்பிட்டிமுனை பளில்'' என்று.

உன் வாசகர் ஒருவர் ஒரு நாள் உங்கள் கடையில் நீங்கள் என்று தெரியாமலே உங்களுடைய எழுத்தைபற்றி கதைத்த போது ஒரு மணி நேரம் கரைந்து போன நீங்கள் நான்தான் பளீல் என்று கூறி இப்போது என் கை வசத்தில் இருப்பது இவை இரண்டு புத்தகங்களுமே என்று ஆசிரியர் போட்டிப்பரீட்சை, எழுது வினைஞர் கடந்த காலவினா விடை யையும் அவ்வாசகருக்கு பரிசளித்தீர்கள் -அது உங்கள் ஈகைக்கு சாட்சி.

S.L.A.S பரீட்சை வெற்றியின் பின் நமது ஊரில் வைத்த மாபெரும் வாழ்த்து வைபவத்தில் உங்கள் பழைய வறுமை நிலை கூறி குலுங்கிக்குலுங்கி அழுதீர்கள் அது உங்கள் - ஈரத்துச்சாட்சி.





உங்கள் காரியாலயத்திற்கு வரும் அனைவரையும் உங்கள் முன் இருக்கும் கதிரையில் அமர்த்தி அவர்களின் பிரச்சனைகளை முடிக்காமல் திருப்புவதில்லையே அது உங்கள் - மனிதாபிமானத்திற்கு சாட்சி.

ஒரு வேலையை ஆரம்பித்தால் எத்தனை மணிநேரம் சென்றாலும் அதனை முடியாமல் எழும்பமாட்டீர்களே அது உங்கள் - உறுதிக்கு சாட்சி.

எந்த ஒரு விடயத்திற்கு செல்லும் போது ஒரு நிமிடம் கூட பிந்தாமல் முந்தாமல் செல்வீர்களே அது உங்கள் - நேரம் தவறாமைக்கு சாட்சி.

நிதி உதவிகள் கேட்டு வருபவர்களை ஏமாற்றாமல் உங்கள் பங்களிப்பை செய்வீர்களே அது உங்கள - பெரும் தன்மைக்கு சாட்சி.

உங்கள் வெற்றியில் இருந்து நாங்கள் கற்றுக் கொள்வதற்கு ஒன்றே ஒன்று உண்டு அதுதான்

நசிந்து போனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது.

உங்கள் புத்தகங்கள் எல்லாம் இலங்கைக்கு நீங்கள் செய்த ரத்ததானமாகும்.

பரீட்சையில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பும் அனைவரும் உங்கள புத்தகங்களை உச்சரிக்க வேண்டும்.

உங்களுக்காய் நான் எவ்வளவோ செய்ய ஆசைப்பட்டேன் ஆனால் என்னால் முடிந்தது இந்த இரங்கல் செய்திதான்

எது எப்படி இருந்தாலும்

ஒரே ஒரு சந்திரன்தான்

ஒரே ஒரு சூரியன்தான்

ஒரே ஒரு பளில்தான்.

**— எஸ். எம். அனஸ் -**

# அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம் சார்பாக....

நீங்காத நினைவுகளாக.

மனிதனின் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு இறைவன் நியதி. எனினும் சிலரின் இறப்பு பெரும் இழப்பாகி அவர்கள் இம்மண்ணிற்காற்றிய சேவைகளையே எம் மனக்கண்ணின் காட்சிப்பொருளாக ஆக்குகின்றன. இம்மனக்காட்சியுடனேயே அமரர் ALM பளீல் அவர்களுக்கு இவ் அனுதாபச்செய்தியை எழுதுகின்றேன்.

வசீகரமிக்க தோற்றமும் புன் சிரிப்பும் கொண்ட பாடசாலை மாணவன் பளீலை நினைக்கின்றேன். கல்வியில் சிறப்பானவன் மட்டுமல்ல சிறந்த ஆக்கத்திறனும் மொழி ஆற்றலும் கொண்டவன்.அவரினது இலக்கியப் படைப்புக்கள் சமூகக்கண்ணாடிகளாக விழங்கயது. மண் வாசனை வீசியது. தனித்துவமானது.. பின்னாளில் வான்மை விருத்திமிக்க ஆசானாக எச்சமூகத்திற்கும் குறிப்பாக தனது மாணவர்களுக்கும் ஆற்றிய பணி அளப்பெரியது.

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளராக விளங்கிய நாட்களை அவரின் உள்ளார்ந்த திறமைகளையும் ஆளுமையையும் பறைசாற்றி நின்ற நாட்கள் எனலாம். ஒரு இஸ்லாமியன் ஆனால் பிறமதங்களை மதிக்கத்தெரிந்தவன். இனம் எனக்கூறிக்கொண்டு பூசல்கள் உருவாகின்ற போதெல்லாம் சுமுக நிலை தோன்றி மக்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதிலேயே கண்ணாய் இருந்தவர். சமாதானம் என்ற பொருளில் அவர் கூட்டிய கூட்டங்கள் எல்லாம் இதற்கு சாட்சி பகர்கின்றன.

சிறந்த எழுத்தாளராக சிறந்த பேச்சாளராக சிறந்த நூலாசிரியராக மொத்தத்தில் சகல கலா வல்லவனாக விளங்கிய அமரர் பளீல் இறந்தும் இறவாதவரே.அவர் என்றென்றும் எம் உள்ளங்களில் நிறைந்திருப்பார்.அவர் எங்களோடு பேசிய இனிய வார்த்தைகள் எங்களின் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

அன்னாரின் பிரிவுத்துயரினால் கலங்கி நிற்கும் அவரது மனைவி மக்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழந்த கவலையைத் தெரிவிப்பதோடு அமரர் பளீலின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

**திரு. கா.சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர்)**
தலைவர், அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம்





# காத்தான்குடி அனைத்து பள்ளிவாயல்கள் சம்மேளனத்திலிருந்து...

கடந்த 02.12.2005 வெள்ளிக்கிழமை பகல் 12.40 க்கு சுடப்பட்டு 04.12.2005 ஞாயிறு காலை 8 மணியளவில் எமது பிரதேச செயலாளர் கௌரவ மர்ஹூம் ALM பளீல் அவர்கள் அகால மரணமடைந்தார். அன்னாரின் மனைவி, அருமைக்குழந்தைகள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் புத்திஜீவிகள், கல்விமான்களின் படுகொலைகளின் வரிசையில் இன்று பளீல் அவர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மர்ஹூம் பளீல் அவர்கள் ஒரு பிரதேச செயலாளர் மட்டுமன்றி, பல நிருவாக உத்தியோகத்தர்கள் உருவாக காரணமாகவிருந்த ஒருவர். கடந்த இரண்டு ஆண்டு காலம் காத்தான்குடி பிரதேச செயலாளராக இருந்து நெகிழ்வுத்தன்மையோடு தனது நிர்வாகத்தை சிறப்பாகச் செய்த ஒருவர். அன்னாரின் இழப்பு எல்லாச்சமூகங்களுக்கும் ஏற்பட்ட பாரிய இழப்பாகும். இச்சந்தர்ப்பத்தில் அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக நாம் அனைவரும் இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றோம்.

**அனைத்துப்பள்ளிவாயல்கள்**
**சம்மேளனம்**
காத்தான்குடி

## அம்பாரை மாவட்ட அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளனம் சார்பாக...

நற்பிட்டிமுனையின் கல்விச்செல்வம் கலைச்சுடர் ALM பளீல் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடமையில் இருந்த போது சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி கேட்டு நாம் பேர் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அம்பாரை மாவட்ட பள்ளிவாசல் சம்மேளனம் உடனடியாக அதன் கண்டனத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டது.

இவர் முஸ்லீம் சமூகத்தின் நிர்வாக சேவை உத்தியோகத்தர் மட்டுமன்றி ஒரு சிறந்த ஆசிரியர். எழுத்தாளர். நூல் வெளியீட்டாளர். இலக்கிய கர்த்தா என்ற பல்வேறு ஆளுமைகளை கொண்டிருந்தார். அவைகள் மூலம் தமது சமூகத்தொண்டினை மிகச்சிறப்பாகச் செய்து வந்தார்.

கல்வி கற்கும் மாணவப்பருவத்திலிருந்தே நற்பிட்டிமுனை பளீல் என்ற பெயரில் இலங்கையின் தலை சிறந்த தினசரிகளில் கதை,கட்டுரை, விமர்சனங்களை எழுதிப் புகழ்படைத்தவர். 1986 முதல் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியராக மட்டுமன்றி இந்தப்பிராந்திய மாணவர்கள் அனைவரும் நன்மை பெற மேலதிக வகுப்புக்களை நடாத்தி வந்தார். விஞ்ஞானக்கல்வி கற்கும் மாணவர்கள் பலர் இதன் மூலம் மிகப்பெரிய நன்மைகளைப்பெற்றனர்.

1991 ஏப்ரல் 1ம் திகதி முதல் நிர்வாகசேவை உத்தியோகத்தராக கல்முனை, காத்தான்குடி பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராக கடமை புரிந்தார். இவரது சேவையில் நாம் பெரிதும் பாராட்டத்தக்கதும் மறக்கமுடியாததும் மாணவர்களுக்குச் செய்த சேவையாகும்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை அரசாங்க உத்தியோகத்திற்கான போட்டிப்பரீட்சை, அரச நிர்வாக சேவை, கல்வி நிருவாக சேவை போட்டிப்பரீட்சை என்பவற்றுக்காகவும் பொது அறிவு பொது உளச்சார்பு விருத்திக்காகவும் இவர் எழுதிய வழிகாட்டல் நூல்களும் நடாத்திய விசேட வகுப்புக்களும் இவரது ஆளுமையின் மிகப்பெரும் அம்சங்களாகும்.





அன்னார் சுட்டுக்கொல்லப்பட்டமை மிருகத்தனமான செயல் மட்டுமன்றி மனிதாபிமானத்துக்கு முரணானதுமாகும். இது எல்லோராலும் கண்டிக்கத்தக்கதாகும். இவரை இழந்த போது நற்பிட்டிமுனைக்கிராமத்தின் ஒவ்வொரு தாயும் தனது சொந்தப்பிள்ளை ஒன்றை இழந்த உணர்வோடு கதறி அழுததை எம் கண்முன்னால் காணமுடிந்தது.ஆனால் இவரது இழப்பு இம்மாவட்டத்தில் ஒட்டு மொத்தமாக வாழ்கின்ற முஸ்லீம்கள் அனைவரும் தமது சொந்தப்பிள்ளை ஒன்றை இழந்துவிட்ட உணர்வோடு காணப்பட்டனர். ஏனெனில் அவர் இச்சமூகத்தின் இழக்க முடியாத சொத்தாகும்.

எல்லாவற்றையும் அறிந்தும் எல்லோர் மீதும் ஆட்சி அதிகாரம் செலுத்துகின்ற அருளாளனும் அன்புடையோனுமாகிய வல்ல நாயன் அல்லாஹ் அவருக்கு ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் மேலான சுவனபதியை நஸீபாக்குவானாக. அவரது குடும்பத்தின் மேம்பாடுகளுக்கு அல்லாஹ் பொறுப்பாளனாவானாக என இச்சம்மேளனத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

அல் ஹாஜ் மௌலவி SLM **ஹனீபா**
BA(Cey) B.Lit(KSA)
தலைவர்,
அம்பாறை மாவட்ட பள்ளிவாயல் சம்மேளனம்
ஜும்ஆ பெரிய பள்ளிவாசல், அக்கரைப்பற்று

බලවත් ශෝකය පිරිනැමීම.

ඒ. එල්. එම්. ෆලීල් (ප්‍රාදේශීය ලේකම්) මැතිනි අප සහෝදරයන්ගේ සියලුම ජනතාවන්ගේ ගෞරවයට ලක්වී ඇත. මේ අය පිළිබඳව ජීවිතයේදී මෙහෙම සිදුවූ මරණය සම්බන්ධව මගේ ශෝකය කණගාටුව ප්‍රකාශය කිරීමට හැකිවීම මාහට දෙවියන් ගෙන් ලැබුණු එක් වරමකි.

මිය ගිය ඒ. එල්. එම්. ෆලීල් ව්‍යක්තිමත් පරිපාලක-යෙකු වුවද එක් කර්තෘවරයෙකුද වේ. මෙම අයට සිදුවූ මරණය පිළිබඳව අසා බොහෝ කණගාටුවට පත්වූයෙමි.

ඒ. එල්. එම්. ෆලීල් මැතිනි අප මේ දිවයිනේ සියලුම ජාතීන්ගේ මතය අනුව ජීවත්වූ බුද්ධිය සහිත එක් පුද්ගලයෙකි. මේ අයගෙන් මේ රටෙත් සියලුම ජාතීන්ගෙන් ලැබිය යුතු අවශ්‍යතා බොහෝ ඇති අතර අදාල අවශ්‍යතා ඉටුකිරීම පෙර මරණයට පත්වීම බොහෝ ශෝකජනක පුවතකි.

මිය ගිය ඒ. එල්. එම්. ෆලීල් පරිපාලන සේවා යටතේ තම වෘත්තියෙන් බෙදී සිටියෝ උදව්වත් මේ දිවයිනේ සාර්ථක මාර්ගයක් ඇතිකර දීමට අවශ්‍ය කෙනෙකි.

එමනිසා මේ අයට අත්විඳි අසරණ තත්වයට පත්වූ පවුල, ඥාතිහිතමිත්‍රාදී අයගේ සහෝදර, බොහෝ බලවත් ශෝකය පිරිනමන අතර මේ අයගේ පරලොව ජීවිතය සාර්ථක වේවා යැයි ප්‍රාර්ථනා කරමි.

- ස්තූතියි -

මෙයට

රන්මුතුගල සංඝරත්න හිමි
විහාරාධිකාරී
ශ්‍රී සුභද්‍රාරාම විහාරය
කල්මුනේ - 01.





# கல்முனை பௌத்த விகாரையிலிருந்து....

ALM .பளீல் என்பவர் எல்லோராலும் போற்றப்படக்கூடிய ஒரு திறமைசாலி ஆவார். இவரை நினைத்து இவரின் மரணத்தை வெளிப்படுத்தும், ஒரு அனுதாபச்செய்தியினை வழங்குவது எனக்கு ஆண்டவன் தந்த பெருங்கொடையாகும்.

மர்ஹூம் ALM. பளீல் சிறந்த நிருவாகியும், ஒரு எழுத்தாளனுமாகும் இவரை, இம் மண் இழந்த செய்தி கேட்டு, என் மனம் மிகவும் வேதனை அடைந்தது. ALM. பளீல் என்பவர் இந்நாட்டின் அனைத்து இன மக்களினதும் பொதுவான புத்திஜீவியாகும். இவரைக்கொண்டு இந்நாடும், இம்மக்களும் அடைய வேண்டிய தேவைகள் நிறைய இருந்த போதிலும், காலன் இவரின் உயிரை இடைநடுவே கைப்பற்றியது என்பது, இழக்கமுடியாத இழப்பாகும்.

மர்ஹூம் ALM பளீல் நாட்டின் நிருவாகத்தில் ஒரு துறை சார்ந்த அதிகாரியாக இருந்தது என்பது, நாட்டினை வழிநடாத்துகின்ற பெரும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

எனவே. இவரை இழந்து தவிக்கும் குடும்பம் , உறவினர்கள், இவரது சமூகம் என்பவற்றிற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன. இவரின் மறுமை ஈடேற்றத்திற்கும் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி,

**ரன்முத்துகல சங்கரத்ன**
விகாரை அதிகாரி
சிறி சுபத்திரராம விகாரை
கல்முனை

## பளீல்...

நாம் கடந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு முக்கிய விடயம் நடைபெறும். எனக்கு பளீலின் பிரிவு.

மிகச் சிறந்த ஆசிரியரான பளீலும், நானும் திரிந்த காலங்கள் எங்களுக்கும் எமது நண்பர்களுக்கும் மறக்கமுடியாதவை. தனது ஆசிரியர் சேவையை எவ்வாறு மிகவும் நிதானமாகவும், திறமையாகவும் செய்தாரோ, அதே போல் தனது பிரதேச செயலாளர் பதவியையும் மிகத்திறம்பட மக்களுக்காக மட்டுமே மேற்கொண்டவர்.

தனது ஒவ்வொரு செயலையும் நன்கு திட்டமிட்டு செயற்படும் பளீல் காத்தான்குடி மக்களுக்கான இருப்பை உறுதிப்படுத்துவதில் மிகவும் கவனமாகச்சிந்தித்து முடிவெடுத்ததன் விளைவே அவரது மரணமாகும்.

மக்களுக்கான தனது சேவையில் பளீல் ஒருபோதும் பின் நிற்கவில்லை. கல்முனையில் பிரதேச செயலாளராக இருந்தபோது அவரிடம் முறையிடச்சென்ற யாருக்கும் அவர் உதவி செய்ய மறுக்கவில்லை.

தனதும் சட்டத்தினதும் இயலுமைகளின் உச்ச நிலைகளில் மக்களுக்கு அவர் தொண்டாற்றியவர். தனது பதவி மூலம் யாருக்கும் தீங்கு செய்யாமல் வாழ்ந்தவர்தான் பளீல்.

அவரை சிலர் தூற்றினர். அவ்வாறு தூற்றியவர் யாரும் தமது கிராமங்களில் மற்றவர்களால் தூற்றப்படாமல் வாழவில்லை.

பளீலின் மரணம் நமது சமூகத்தின் அறிவு ஜீவிகளினதும் அதிகாரிகளினதும் இருப்புக்கு மிகவும் பெரிய சவால்தான். இதனை மக்கள் விரைவில் உணர்வார்கள்.

MKM. **மன்சூர்**
B.Sc, PGDE, MED(Canada), SLEAS
விரிவுரையாளர்
கல்வியல் கல்லூரி





## அம்பாரை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திருந்து ....

எமது சமூகத்திற்கோர் ஒப்பற்ற கலங்கரை விளக்காகத் திகழ்ந்த எமது சகோதரர் ALM பளீல் அவர்கள் கல்முனை நற்பிட்டிமுனையில் பிறந்தார். பிறகு இளம் வயதிலேயே உயரிய நிலையை அடைந்தார். இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ்விற்குரிய கடமையை நிறைவேற்றுவதுடன் அவனது படைப்பினங்களுக்கான கடமையையும் நிறைவேற்ற வேண்டியவனாக உள்ளான். இந்த வகையில் நண்பர் பளீல் அவர்களும் தான் படைக்கப்பட்ட நோக்கத்தை செவ்வனே நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

இளமையிலேயே கல்வித்துறையில் முன்னேறி மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். கல்விச்சேவையை மாணவ சமுதாயத்தின் முதுகெலும்பாக மதித்து சிறிது காலம் பணியாற்றினார். பின்னர் நிர்வாக சேவையில் தேறி சமூகப்பணியை தொடர்ந்தார். இனவேறுபாடுகளை களைந்து பொது நோக்கில் தேறி சமூகப்பணியை தொடர்ந்தார். இனவேறுபாடுகளை களைந்து பொது நோக்கில் சேவையாற்றினார். எழுத்துத்துறையிலும் தேர்ச்சி பெற்று பல நூல்களை வெளியிட்டார். சமூகவியல், அரசியல் சட்டம் பொதுவிடயங்கள் கலை சிறுகதைகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவை மூலம் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றார். பேனா முனையினூடாக சிந்திக்க ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற முனைப்புக்கொண்டார்.

மனிதனுக்கு கிடைக்கும் அரிய செல்வம் குணமாகும். இந்தவகையில் சிறந்த சிறந்த குணமும் நல்லொழுக்கமும் விடாமுயற்சியும் கடின உழைப்பும் எந்த எதிர்ப்புக்களையும் சவால்களையும் துணிவோடு ஏற்று செயற்படும் நுண்ணறிவும்

தீர்க்கதரிசனாக எதிர்காலத்தை திட்டமிடும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்றவர் நண்பர் பளீல் நேர்மையும் நிதானமும் அவரது நிர்வாகத்தின் தனிச்சிறப்புக்களை வெண்ணிற ஆடை அணிந்து தனது கடமை நிமிர்த்தம் அவர் பவனி வந்தது தனி அழகு. தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தக்க ஆலோசனைகளையும் செயற்பாடுகளையும் வழங்கி இளைஞர் சமூகத்தின் தன்மதிப்பைப்பெற்றார். அன்னாரின் பிரிவு எமது சமூகத்திற்கு மட்டுமல்ல இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் ஈடு செய்யாதோர் பேரிழப்பாகும்.

எனவே அன்னாரின் மறைவினால் துயருரும் குடும்பத்தினரும் உறவினர்களும் ஆறுதல் பெறவும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தில் சேர்த்து வைப்பானாக. ஆமின் ஆமீன் யாரப்பல் ஆலமீன்

"வையத்துல் வாழ்வாங்கும் வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அல் ஹாஜ் SMA **காதர்** JP

**உதவிப்பணிப்பாளர்**

தேசிய இளைஞர் சேவை மன்றம்

அம்பாறை மாவட்டம்





# என்றும் என் நினைவுகளில்....

என்னருமை பளீல் சேரே !
என்னுள்ளம் நிறைந்தவரே
இன்னும் உங்கள் இறப்பதனை
ஏற்குதில்லை என்னிதயம்.
என்னுடைய பிறந்த நாளில்
உம்முடைய இறந்த நாளும்
ஒன்று சேர்ந்து நிற்பதனால்
எதை இங்கு நான் மறக்க.

உயிரியல் பாடம் - அதில்
பிறப்புரிமை பாட அலகொன்றை
சிறப்புடனே உம்மிடத்தில்
நிரப்பமுடன் கற்றவன் நான். -
அதில்
நெஞ்சமெல்லாம் நிறைந்தவர் நீர்.-
குடும்ப
பிறப்பினிலும் உரிமை உம்மில்
பின்னி நான் கிடப்பதனால் -
உம்
இறப்பை உண்மையென்று
எப்படி நான் நம்பிடுவேன்.

சமுர்த்தி நியமனத்தில் என்னை
சங்கையுடன் முதலிடத்தில்
வைத்தழகு பார்த்தவன் நீர்.- என்
வேலைக்கான நியமனம்
மூன்றாம் இடம் வந்திருந்தேன் - நீர்
முதலாமிடம் ஆக்கி வைத்தீர்
அப்படியோர் திருநாளை
இனியிங்கே என்று காண்பேன்.

நண்பர்கள் நாங்கள் வந்து
நலம் நீங்கள் என்றுணர்ந்து
இருப்பீர்கள் நீண்ட காலமென்ற
இனிப்பான நம்பிக்கையில்
வானூர்தி கொண்டு செல்ல
வழியனுப்பி நாங்கள் வந்தோம்.
அன்றய இறுதி நாளை
இன்றுவரை மறக்கவில்லை.

எழுத்துக்கலை தனிலே
இமயம் எனத்திகழ்ந்தவர் நீர்
எந்தன் கலைகள் கண்டு
இதயம் பொங்கப் புகழ்ந்தவர் நீர்-
உம்மால்
சிந்தும் கண்ணீர் இங்கு
சிறுகடல் போலானது.
இன்னுமோர் பளீல் சேரை
நாங்கள் எங்கு சென்று தேடுவது

**ஆட்டிஸ்ட் அஸ்கர்**
(சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்)
நற்பிட்டிமுனை.

# அணைந்திடாத அறிவுச்சுடர்....

நற்பிட்டிமுனை பளீல்
நினைவுகளுக்குள் ஒன்றித்துப்போன
அணைந்திடாத அறிவுச்சுடர்
நம்
நம்பிக்கை நட்சத்திரம்.

தேசிய இளைஞர் சேவை மன்ற
தட்டச்சுப்பயிற்சி நெறி
சிங்களக்கற்கை நெறி
பூர்த்தி செய்தவர்களுக்காய்
சான்றிதழ் வழங்கும் விழா
எனது தலைமையில் நடக்க
பிரதம அதிதிதாய் கலந்து சிறப்பித்து
இன ஒற்றுமையை வலியுறுத்திய
ஒற்றுமைக்கேசத்தின் விடிவெள்ளி.

தாவரவியல் பாடத்தை
காந்தத்திறணால்
தேனாய் கற்பித்து
கரும்பை நாடிச்செல்லும்
எறும்புக்கூட்டம் போல்
மாணவர் படையை
தம்பால் ஈர்த்துக்கொண்ட
ஆசான் திலகம்.

படிப்படியாய்
படிகளில் உயர்ந்து
எம் கிராமத்திற்கு
எங்கும்
விலாசம் கிடைக்கச்செய்த
விசால மனம் கொண்ட
விசித்திரமான சிற்பி.





சகல சமூகத்தினரும்
அறிவொளி பெற்று வாழ்வதற்காய்
புத்தகம் பல எழுதி
அறிவு விதை விதைத்து
அகிலத்திற்கு அறிவுக்கொடை கொடுத்து
கல்விக்காய் உயிர்கொடுத்தோர்
மரணிப்பதில்லை என்ற
தத்துவத்தை
தனதாக்கிச்சென்ற
கல்விப் பெருந்தகை.

பெருந்தகையின்
இழப்பு
எமக்கோர் பாரிய இடி.
அவரின் உயிர்
பிரிந்த போது
அவர் அடைந்த வேதனைகளை
விடவும்
அப்பிரிவினால்
நாம் அடைகின்ற வேதனைகளோ
அளப்பெரிது.

இறைதூதர் அவர்களின்
ஆசியுடன்
பிர்தெளஸ் எனும்
சுவர்க்கத்துப் பூங்காவில்
சுகமான இடம் கிடைக்க
என்றும்
என் பிரார்த்தனைகள்

**W. ஐயூப்கான் (ஆசிரியர்)**

# கல்முனை ஸாஹிறாக்கல்லூரியிலிருந்து....

கல்வி உலகின் ஒரு கலங்கரை விளக்கு நற்பிட்டிமுனை பளீல்

. ALM. பளீல். அவர்களை நான் அவரது மாணவப்பருவத்திலே எனது மாணவனாகவும், அவர் பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றியபோது எனது சக ஆசிரியராகவும், பிரதேசச்செயலாளராக கல்முனையில் கடமையாற்றியபோது எமது பிரதேசத்தின் பிரதேச செயலாளராகவும் பல்வேறு பாத்திரங்களில் கண்டு பழகி, ரசித்து, மகிழ்ச்சியடைந்தும் இருந்திருக்கின்றேன்.

கார்மேல் பாத்திமாக கல்லூரியில் 1978 காலப்பகுதியில் ஒரு மாலை நேர வகுப்பு தரம் 10A வகுப்புக்கு நான் ஒரு பாடஆசரியர். பாடங்களை நடாத்தி முடித்து விட்டு மாணவர்களோடு அளவளாவிக் கொண்டிருந்த வேளை ஒவ்வொரு மாணவரும் தங்களைப்பற்றி கூறிக்கொண்டிருந்தனர். அந்த வேளை எனக்கு இன்றுமே பசுமையாக இருக்கின்றது.'. தன்னைப்பற்றி தானே கூறுவதற்கு விரும்பாத மாணவனைக்கண்டேன். அழகிய கண்கள், நிதானமான பார்வை, அடக்கமான குணம், புன்முறுவலுக்கு ஓய்வில்லாத தங்க வதனம் பேசுங்கள் என்றேன். மற்றவர்கள்தான் இவரைப்பற்றி பேசினார்கள். இவர் நல்ல எழுத்தாளர் சேர். பத்திரிகைகளுக்கெல்லாம் கதை எழுதுவார் சேர். என்று சுகுணகுமார், ரவீந்திரன், வித்தியானி போன்ற ஏனைய மாணவர்கள் கூறினார்கள். நான் ஆச்சரியப்படவில்லை. காரணம் அவருடைய அழகான உறுப்பமைய எழுத்துக்கள் அதற்கு போதிய ஆதாரமாய் அமைந்திருந்தன.

பின்னர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக இல்லை இல்லை ஒரு ஆசிரியரியத்திலகமாக இப்போது நான் அதிபராகக் கடமையாற்றுகின்ற கல்முனை ஸாஹிறாவில் கண்டேன். நல்ல மாணாக்கன் ஒருவர் ஆசிரியத்திலகமாக என்னோடு சக ஆசிரியராக கடமையாற்றுவதை கண்டு எனக்கு ஆனந்தம் அதிகமாயிற்று.

கல்முனை ஸாஹிறாக்கல்லூரியில் அவர் ஒரு உயிரியல் துறை பட்டதாரி ஆசியராகக் கடமையாற்றிய காலம் இப்பாடசாலைக்கு ஒரு பொற்காலம் என்பதை என்னால் கூறாமல் இருக்க முடியவில்லை. அவர் மாணவர்களை தனது பேச்சு வன்மையாலும் திறமையாலும் கவர்ந்து தான் கூறுகின்ற விஷயதானங்களை துல்லியமாகவும், தெளிவாகவும், சந்தேகத்திற்கிடமில்லாமலும் புதுப்புதுப் பாணியில்





சொல்லி மாணவர் மனங்களில் பதிய வைக்கின்ற தன்மை அவருக்கேயுரிய தனித்துவமான ஒரு கலையாகும்.. இவரின் பாட முடிவில் அவை அனைத்தையும் இரத்தினச்சுருக்கமாக தொகுத்து ஒரு டியூட் வடிவில் மாணவர் கரங்களுக்கு வழங்கி விடுவார். இவரின் மீது மாணவர்கள் கொண்ட நல்லபிப்பிராயத்தின் காரணமாக நிறைந்த மாணவர்கள் இவர் கற்பித்த பாடத்தில் திறமைச்சித்திகளை பெற்றது இவரது ஆசிரியத்தொழிலுக்கு நல்ல சான்றாகும். இக்கல்லூரியில் இருந்த வேளையிலேயே பிரதேச செயலாளரானார். இதனால் இக்கல்லூரி பெருமை அடைந்தது. இவர் இக்கல்லூரியில் ஆசிரியராக இருக்கும் காலத்தில் இவரால் உருவாக்கப்பட்ட "கிறீன் ஹவுஸூம்" , "நீர்த்தொட்டியும்" அழியாத்தடங்களாக இன்றும் எமது பாடசாலையில் நிலைத்து இருக்கின்றன. இதனால் நான் இவர் மற்றவர்களால பின்பற்றக்கூடிய ஒரு ஆசிரியர்த்திலகமாகவும் திகழ்ந்து வந்தார். இவர் நற்பிட்டிமுனையின் ஒரு விலை மதிப்பற்ற மனித குல மாணிக்கம் எனப்போற்றப்பட்டார். இவர் இன மத வேறுபாடுகளை இஞ்சித்தேனும் இல்லாதவராகவும், எல்லோருக்கும் இனியவராகவும், காணப்பட்டார். இப்பேறபட்ட மனித நேயத்துக்கு வரைவிலக்கணமான ALM பளீல் என்பவரை இன்று நாங்கள் இழந்து தவிக்கின்றோம்.

மர்ஹூம் பளீல் பிற்காலத்தில் தான் எவ்வளவு வேலைப்பழுக்களுக்கும் மத்தியிலும் பல துறைகளிலும் அதிகமான புத்தகங்கவெளியிட்டார்.. இவரது புத்தகத்தைப் படித்த பலர் இன்று SLEAS, SLAS, SLPS ஆகத்திகழ்கின்றனர்.

நிருவாக சேவை உத்தியோகத்தராக இருந்த இவரது நடை உடை பாவனைகளால் கவரப்பட்ட இவருடைய அதிபரும் எனது அதிபருமான SAI மத்தியூ அவர்கள் மிக அண்மையில் கூட என்னிடம் மகவும் சந்தோசமாக வாயாறப்புகழ்ந்து ALM பளீல் கார்மேல் பாத்திமாவின் ஒரு விடிவெள்ளி என்று புகழாரம் சூட்டினார்.

எனவே மர்ஹூம் பளீல் அவரின் பீசபீல் மரணத்தை அல்லாஹ் பொருந்திக்கொண்டு அவருக்கு சுவர்க்கத்தை நன்மாராயணம் செய்வானாக. என்று பிரார்த்திக்கின்றேன்.

**M.M இஸ்மாயில்** அதிபர்,
கமு ஸாஹிறா தேசிய பாடசாலை கல்முனை

# அவசர மடல் ஒன்று.....

அன்புத்தம்பி பஸீலுக்கு,
அவசர மடல் ஒன்று
நன்றிகொல்லா ஒரு ஜீவன்
நான்தான் எழுதுகிறேன்
எண்ணினேன் ஆயிரம்
எழுத்தினிலே வரவில்லை
என்றாலும் சில வரிகள்
என்றும் உன் நினைவாக.

நாற்பத்து நாட்கள்
நகர்ந்ததே தெரியவில்லை
கவலையால் என் இதயக்
கனல் இன்றும் தணியவில்லை
பெற்றெடுத்த மகவொன்று
பிரிந்துவிட்ட நினைவொன்று
அன்னையவள் அடையும்
ஆறாத்துயர் எனக்கு.

கல்வியில் என்னோடு
கைகோர்த்த காலங்களும்
'NECDA' அமைப்பின் வழி
நீ செய்த சேவைகளும்
நன்றியுடன் என் நெஞ்சில்
நாளும் நிலைத்திருக்கும்.

எம்மோடு நீ கொண்ட
இதமான உறவுகளும்
தன்னோடு நீ கொண்ட
பக்திகளும் பாசங்களும்
இதயத்தில் எப்போதும்
இரண்டறக் கலந்திருக்கும்.

வாழ்க்கையெனு நாடகத்தின்
வடிவத்தான் மாறிடினும்
திரையும் விழுந்து விடும்
கதையும் முடிந்து விடும்
சொந்தம் ஒரு தொடர் கதையே
தொடர்வதன்றி முடிவதில்லை.

கண்ணீரைச் சிந்துவதால்
கவலைகள் குறைவதில்லை
மண்ணினால் மேவுதல்
மனத்துயர்கள் மாறுவதில்லை
வித்தாக உன்னை நட்டோம்
விருட்சமாய் வளர்வதற்கு.

என்றும் என் 'துஆக்கள்'
இனியே உனக்குண்டு
இறையருள் கடாட்சத்தால்
இணைந்திடுவோம் 'பிர்தௌஸில்'

பாசமுள்ள,
ஏ.எம். ஜமால்தீன்
அதிபர்
க/பொ அல்-அக்ஸா மகா வித்தியாலயம்
[illegible].
11.01.2006





# மல்வானை தேசிய பாடசாலையிலிருந்து....

இதயத்தை அறுக்கும் இடைவெளி

அது..
நிரந்தரமில்லா நிலாக்காலம்.
நீளவுமில்லை..
குறுகவுமில்லை..
அது
நிரந்தரமில்லா நிலாக்காலம்...

வளர்த்த கடா
மார்பில் பாய்வது போல
வாலிபம்
அடிக்கடி துள்ளிக்குதிக்கும். ........
சில நேரங்களில்
வயதுக்கு மூத்த
இறக்கை கட்டி
அது
பறக்க நினைக்கும்.
உண்மையில்
நிரந்தரமில்லாத நிலாக்காலமது.

இருண்ட வான் வெளியில்
திசைகாட்டும்
நட்சத்திரக்கூட்டத்தை
நம்பியது போல ....
ஊர்
நம்மை நேசித்தது....
கனவுகளைக்
காணிக்கையாக்கி
நம்பிக்கை மலர்தூவி
வறுமை நம்மை
வழியனுப்பி வைத்தது.
படியேறினோம்
பல்கலைக்கழகம் நோக்கி.

விரிவுரைகள் .. வேடிக்கைகள்...
அதனிடையே பரீட்சைகளாய்..
முடிந்தன.
மூன்று வருடங்கள்
முடிவில்லா ஆரம்பங்களும்
ஆரம்பமில்லா முடிவுகளும்
அங்குதான் அறிமுகமாயின.

அங்கே
நில அதிர்வின் இடிபாடுகளில் சிக்கி
உயிர்தப்பிய ஒருவனைப்போல்
விஞ்ஞானமாணிப்பட்டம்
வெளிப்பட்டது.
பட்டதாரிகளாய் பவனி வந்த நாட்கள்
பசுமையானவை.
நம்மைப்பொறுத்தவரை
நந்தவனத்தில்
நடந்த நாட்கள் அவை.

அப்போதெல்லாம்
ஆயிரம் சூரியன்கள்
ஒன்றாய் உதித்து
பொழுதுகள் விடிந்தன.

காலம் செய்த சோதனை
வாழ்வியல் தேவைகள்
நமது வாழிடங்களைக் கூட
வரையறை செய்தன.
பிரிவுக்கோடுகள் பெருகிப்போயின.
இருப்பினும் என்ன
அருகருகாய் ஓடும்
தண்டவாளங்களைப்போல
அவ்வப்போது பேசிக்கொள்வோம்.

அன்றொரு நாள்
நடுநிசியில்
தொலைபேசி மூலம்
தொடர்பு கொண்டாய்.
இந்த நேரத்தில் ஏன் என்றேன்.
எனக்கென்று இருக்கும்
சொந்த நேரம்
இதுதான் மச்சான்....
எதையாவது பேசு என்றாய்...
எதை எதையோ பேசினோம்.
எப்படியோ பேசினோம்.
மரணத்தை
மட்டும் எங்கோ
மறைத்து வைத்துவிட்டு.

அன்று
தொலைந்த உன் வார்த்தை வரம்
மீண்டும் திரும்பவில்லை......

நீ சுடப்பட்ட செய்தி
மனவிருட்சத்தின் வேரறுத்து
என்னை
வெறுமைப்படுத்தியது.
உயிர் நரம்பின்
ஒவ்வொரு அணுவையும்
உறைய வைத்தது.

எண்ணங்கள் அனைத்தையும்
எழுத்துக்களாய் பிரசவிக்கும்
தாய்மைப்பேறு
கவிஞனுக்கு மட்டும்தான்.
அந்த வகையில் ,
சொந்தமில்லா நினைவுகளை
எமக்கு
சொந்தமாக்கிச்சென்ற
அற்புதக்கவிஞன் நீ.

ஊரின் பெயரை உச்சரிக்காமலேயே
உயிரோடிருந்தும்
மரணித்துப்போனோர் மத்தியில்
ஊரின் பெயரை
மண் வாசனை கொண்டு
உயிர்ப்பித்த
உண்மைப்படைப்பாளி நீ.

தாவரவியல் ஆசானாய் .........
நல்ல ஆய்வாளனாய் .........
ஊடகவியலில்
ஒப்பற்ற விரிவுரையாளனாய்.........
நகைச்சுவை சொட்டும்
நாடக நடிகனாய் .......
ஏன்
திறமை மிகு சிவில் அதிகாரியாய்..
நீ காட்டிய பரிமாணங்கள்
அனைத்தும்....
அனைத்தும் ...
உன் வயதுக்கு
மிஞ்சிய பரிணாமங்கள்

நீ இலட்சியவாதி.
பொதுப்பணி செய்ய
உன் பணி துறந்து
விதவையானாய்.
அதனால்தானோ என்னவோ
வெள்ளை உடையை
விரும்பித்தேர்ந்தாய்.
அந்தவகையில்
நீ ஒரு இலட்சியவாதி.

யதார்த்த வண்டுகள் தொடாதவரை
உன் புன்னகைப்பூக்கள்
விரிந்ததே இல்லை.
அதனால்
நீ யதார்த்தவாதி.





மடிக்குள் விழுந்த வெள்ளிகளை
மாலையாக்கிச்சூட்டினாய்.
மெல்லச்சாகும் வாலிபத்தை
சொல்லிப்புரியவைத்தாய்.
இன்னும்
என்ன...? என்ன ..?
சொல்ல நினைத்தாயோ ?
தெரியவில்லை.
எதுவும்
புரியவில்லை.
உன் எண்ணக்கருக்கட்டலில்
பிறந்த எத்தனையோ படைப்புக்கள்
இனங்களுக்கிடையே
பாலம் அமைத்ததை பலரும் அறிவர்.

இங்கு
உன்னைப்போன்ற
சிந்தனையாளர்களின் இறப்பும்
எம்மைப்பொறுத்தவரை
ஓர் பிறப்புத்தான்.
திருப்தி அடைந்தோம்..
ஏனெனில்
அஷ்ஷஹீத் எனும்
அந்தஸ்த்தை
நீ
அடைந்து விட்டாய்.
அதற்காகவே
படைக்கப்பட்டாய்.
சுவர்க்கம்
உனக்கு
சொந்தமாகி விட்டது.
நிரந்தரமற்ற
இவ்வுலகை விட்டு நீ
நிரந்தரமாகி விட்டாய்.

அங்கு
வாழ்த்துக்களும்,...
வனப்புக்களும்.....
வல்லோன் துணையால்
உனக்குண்டு.

ஆனாலும்...
ஆனாலும்....
எம் கவலையெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்.
உனக்கு
நாம் தரும் பிரியாவிடை
நீ விட்டுச்செல்லும்
இடைவெளிக்கு
விடையாகுமா ? ? ?

**MIM. மூஸாதிக்.**
(BSc., Dip in Ed)
உயிரியல் ஆசிரியர்
மல்வானை தேசிய பாடசாலை.

# கல்முனை மஹ்மூத் மகளீர் கல்லூரியிலிருந்து....

மரியாதைக்கும் அன்புக்கும் உரிய பஷீர் அவர்களுக்கு,

வெண்புறாவொன்று பாடசாலைக்குள் உலாவருவதாகக் கூறினார்கள். கல்முனை ஸாஹிறாக்கல்லூரியில் தாவரவியல் பாடம் போதிப்பதற்காக நீங்கள் விஞ்ஞானப்பட்டதாரியாக நுழைந்தீர்கள். - வெள்ளைக்கால் சட்டையுடனும், வெள்ளைச்சேட்டுடனும் ! மற்றவர்கள் வகைவகையாக உடுத்தபோதெல்லாம் மாணவர்களின் சார்பாக நீங்கள் மட்டும் மாணவர் உடையிலேயே கொள்கைப்பேணுதலுடன் நடமாடினீர்கள்.

உங்களது கற்பித்தல் திறனும், யுக்தியும், அறிவாற்றலும் கல்லூரி மாணவர்களைக்கவர்ந்ததோடு மட்டுமன்றி, வெளி மாணவர்களையும் ஈர்க்கத்தொடங்கியது. அவ்வேளை கல்முனை மஹ்மூத் மகளீர் கல்லூரி உங்களை சாமர்த்தியமக, தாவரவியல் பாடத்திற்காகப்பயன்படுத்திக்கொண்டதை என்னால் மறக்க முடியாது.

சிறப்பான கற்பித்தல் மூலமும் கண்ணியமான, பண்பான நடத்தை மூலமும் மாணவர்களையும், ஆசிரியர்களையும், என்னையும் ஆகர்சித்தீர்கள். விடாமுயற்சியும், கடமையை செவ்வனே செய்யவேண்டும் என்ற துடிப்பும் உங்களை நீங்கள் உயர்த்திக்கொள்வதற்கான படிகளாக அமைந்தன.

முயற்சி காரணமாக இலங்கை நிருவாக சேவை பரீட்சைக்கு தைரியமாக முகம் கொடுத்து தேர்ச்சியும் பெற்றீரிகள். அதன் காரணமாக உங்களது நற்பிட்டிமுனைக்கிராமம் மட்டுமல்ல, கல்முனைப்பிரதேசம் முழுவதுமே குதூகலம் கொண்டது.

பிரதேச செயலாளர் ஒருவர் எப்படி இருக்க வேண்டும் என்பதை, உங்களை வைத்துத்தான் வரைவிலக்கணம் அமைத்துக்கொண்டோம். அலுக்காமல், அலைக்காமல், சினைக்காமல், சிதறாமல் கடமை செய்த விதம் எந்த ஒரு மனிதனையும் உங்கள் பால் ஈர்க்காமல் இருக்க முடியாது.





கடமையில் கரிசனை காட்டிய அதேவேளை, உங்கள் எழுத்துத்துறையிலும் நீங்கள் கவனம் செலுத்தத்தவறாதிருந்ததும் எமக்கு வியப்பைக்கொடுத்தது. கதைகள்,கவிதைகள் , கட்டுரைகள் மாத்திரமல்ல அறிவு நூல்கள் பலவற்றைக்கூட ஸ்ரீ லங்கா மாதாவுக்கு இயற்றி அர்ப்பணித்துள்ளீர்கள். கல்விக்கூடங்களில் உயர்தர வகுப்புக்களில் கற்கும் மாணவர் பலரும் உங்களது பொது அறிவு - பொது விவேக நூல்களைக்கற்று பயன் பெற்றார்கள். - பயன்பெற்று வருகிறார்கள்.

ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் உத்தியோக உயர்வை நாடிச்செல்வோருக்கும், புதிதாக SLEAS,SLAS,. SLPS, SLTS போன்றவற்றிற்குள் நுழைய முனைபவர்களுக்கும் உங்களது அறிவு நூல்கள் எத்துணை பயன்பட்டு வருகின்றதென்பது அனைத்து புத்திஜீவிகளுக்கும் நன்கு விளங்கும்.

உங்களால் பலர் உயர்ந்துள்ளார்கள். அவர்கள் உயர்ந்ததனால் நீங்கள் மனித மனங்களில் மேலும் உயர்ந்துளளீர்கள். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உங்களது எண்ணத்திற்கும் சேவைக்கும் நடவடிக்கைகளுக்கும், எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களுக்கு நல்ல பாக்கியத்தை அருள வேண்டும்.

பிரியத்திற்கும், மரியாதைக்கும் உரிய நண்பராகிய நீங்கள் மீள முடியாத இடத்திற்குச்சென்று விட்டதாக பலரும் கூறுகின்றார்கள். எம்மால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

எமது உள்ளங்களில் நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுக்காக வரையும் மடலிது.

இலட்சோப லட்சம் உள்ளங்களில் நிலையாக இடம்பிடித்துள்ள உங்களுக்கு அல்லாஹ் "ஜன்னத்துல் பிர்தௌஸை" பரிசாக அளிக்க பிரார்த்திக்கின்றேன்.

**அல்– ஹாஜ் AHA பஷீர்**
அதிபர்
மஹ்மூத் மகளீர் கல்லூரி
கல்முனை

# கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலிருந்து....

முகத்தில் கரியைப்பூசியைக்கொண்டு சைக்கிள் டயரை உருட்டியபடி, வந்தாறு மூலை பல்கலைக்கழகத்தில் நற்பிட்டிமுனை நண்பர்களோடு நாடகத்திற்கு மேடையேறியது ஞாபகம் வருகின்றது.

தலையை ஆட்டி, புன்முறுவல் பூத்து அனைவருக்கும் முகபாவனையிலேயே வணக்கம் சொல்வது, அனைவரையும் கவர்ந்த ஒன்று.

தாவரவியல் படிப்பிக்கின்ற ஆசானாய் வலம் வந்த போது, அச்சிட்டதுபோன்ற உன் அழகான எழுத்தும் , படங்களும் உன் கற்பித்தலுக்கு உரமூட்டியது.. அதன் விளைவாகப்பலர் பல்கலைக்கழகம் சென்றதும் மறக்க முடியாத உண்மையாகும்.

வெள்ளையும், வெள்ளையுமாய் நிருவாக அதிகாரியாய் பணிபுரிந்த போது "ரெடிமேற" புன்னகையால் சமாளித்து நிலைத்தது மறக்கமுடியாதது.

பல்கலைக்கழக நினைவுகளை பத்திரிகைகளில் எழுதிய போது பலர் பயந்து போனது ஞாபகம் வருகின்றது.

அரிது, அரிது மானிடராய்ப்பிறப்பது அரிது. என்றார் அன்று. அரிது, அரிது இயற்கையாய் இறப்பது அரிது. என்றே இன்று எண்ணத்தோன்றுகின்றது.

ஆழ்ந்த அனுதாபங்களையும் , உளமார்ந்த துக்கங் களையும் தெரிவிப்பதைத்தவிர வேறு என்ன செய்து விட முடியும்.

**வ. பிரபாகரன்**
பிரதி அதிபர்
உவெஸ்லி உயர்தர பாடசாலை





# நிந்தவூர் அல் அஸ்ரக் தேசிய பாடசாலையிலிருந்து.....

என் தம்பி பளீல்.

எனக்கு அவன் சகோதரன் என்பதை விட அவன் என் நண்பன்.
மிக நீண்ட காலம் நானும் அவனும் ஒரே கட்டிலில் தூங்கியவர்கள்.
மிகச்சிறிய வயதிலே உழைப்பைத்தொடங்கியவன்.
முட்டை வியாபாரம், லொத்தர் வியாபாரம்,
கச்சான் கடலை வியாபாரம், என்று
தன் படிப்புக்குப்பாதி அவன் சம்பாத்தியம்.
தன் குடும்ப பாரம் குறைய தாயாருடன் நெல்குற்றப்போவான்.
தொழில் செய்யும் இடத்திற்கு தந்தைக்குச்சாப்பாடு கட்டிச்சுமப்பான்.
நேரத்தை மிகத் திட்டம் போட்டு செலவளிப்பான்.
மாலையானால் வீணர் சந்தியில் அரட்டை அரங்கம்.
விளையாட்டிலும் அவன் சுட்டி.
எப்போதும் தலைமை தாங்கும் பழக்கமுள்ளவன்.
கள்ளன் பொலிஸ் விளையாட்டிலும் அவன் பொலிஸ்.
சிறிய விளையாட்டுக்கழகம் ஒன்றிற்கு அவன் தலைவன்.
பின்னாளில் அது பெரிய சமூக சேவைக்கழகமாக உருவெடுத்தது.
அது நற்பிட்டிமுனை குடும்ப நலச்சங்கம்,
விழிப்புக்குழுவென வளர்ந்தது.
தன்னை அவன் எப்போதும் பெரியாளாகவே நினைப்பான்.
அதனால் அவன் பத்திரிகைக்கு எழுதத்தொடங்கினான்.
"பிச்சைப்பொட்டி" எனும் சிறுகதை முதலில் வெளியானது.
அதுவே அவனை எழுத்தாளனாக்கியது.
அவன் செய்யும் காரியம் எதுவும் உச்சமடைய வேணடுமென நினைப்பான்.
அதில் உழைத்து வெற்றியும் பெறுவான்.
மற்றவர்களை மதிப்பதிலும் அவன் சளைக்கமாட்டான்.
தன் குரு அருட் சகோ. மத்தியூ அவனை
"தம்பி நீ எப்போதும் வெள்ளை ஆடை அணி " என்று சொன்னார்.
அதனை அவன் சிரமேற்று இறுதிவரை வெள்ளையுடன் மரணித்தான்.
விடாமுயற்சி வெற்றிபெறும் என்பதற்கு அவன் ஒரு சான்று.
எப்போதும் அவன் ஏதாவதொன்றை எழுதிக்கொண்டே இருப்பான்.
ஆனால் அதிகம் பேச மாட்டான்.

எப்போதும் நகைச்சுவை ததும்ப பேசுவான்.
நண்பன் ஒருவன் தாடியுடன் சோகமுடன் திரிவதைக்கண்டு
"டேய் காசில்லாதவனுக்கு எதுக்குடா சோகம் "
என்று தத்துவம் சொன்னான்.
என்றும் சிரிக்க வைப்பான்.
அவனே புத்தகம் எழுதி
அவனே அச்சடித்து
அவனே கட்டி
அவனே விற்பான்.
அவன்தான் இந்தப்பளீல்.
தலைவர் அஷ்ரப் அவனுக்குப்புத்தியாக
"சட்டத்தை நீ மதி. சட்டம் உன்னைக்காக்கும்."
என்று சொன்னார்.
ஆனால் சட்டம் தெரியாத துப்பாக்கி அவனைத்துளைத்தது
அதனால் பெருக்கெடுத்தது ரத்தமல்ல..
அவனின் புகழ்.
அழியாத கோலங்கள்....
ஆறிலிருந்து அறுபது வரை.....
.முதல்வன்.....
இந்த மூன்று திரைப்படங்களையும் ஒன்றாகச் சேர்த்தால்
"பாவம் இந்தப்பளீல்" என்ற வெற்றிப்படம் கிடைக்கும்.
இவன் அறுபது வயது வரை செய்யவேண்டியதை
நாற்பது வயதுக்குள் அவசரப்பட்டு முடித்துக்கொண்டான்.
பாவம் இந்தப்பளீல்.

இப்படிக்கு
அன்பு நண்பன்
**இஸ்ஸடீன்** B.Sc
நற்பிட்டிமுனை.





# அல்-பஹ்றியா மகா வித்தியாலயத்திலிருந்து....

நற்பிட்டிமுனை பளீல் என்னும் பெயரில் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வரும் கதைகளையும் கவிதைகளையும் படித்துச் சுவைத்தேன். அனைத்தும் உயிரோட்டமுள்ள கதைகள். அந்தப்பளீல் யார். அவரைக்காண வேண்டுமென்ற ஆவல். அப்போதுதான் அவர் கல்முனை ஸாஹிறாக்கல்லூரியில் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியராக நுழைந்தார். புன்முறுவல் பூத்த முகம்., மாணவனா? ஆசிரியனா? என்று வித்தியாசம் காணமுடியாத தோற்றம். ஆசிரியர்கள் மாணவர்களுடன் பழகும் விதம் அனைத்தும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கவர்ந்தன. பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் அவருக்கென்றொரு மாணவர் பட்டாளம். BOTANY FALEEL சேர் என்றால் கல்முனை பிராந்தியத்தில் தெரியாத விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் இருக்க முடியாது. ஸாஹிறா கல்லூரியில் கற்பித்த காலப்பகுதியில் என்னுடன் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார். மிகவும் உரிமையுடன் அவருடைய மோட்டார் சைக்கிளை எனது வீட்டு " போர்டிக்கோவில்" நிறுத்தி வைத்து விட்டு அக்கரைப்பற்று போன்ற இடங்களில் உள்ள ரியூசன் சென்றர்களுக்கு சென்று வந்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

நண்பர் பளீல் அவர்கள் அரசாங்க நிர்வாக சேவை போட்டிப்பரீட்சையிலும் அவரது திறமையை வெளிப்படுத்த தவறவில்லை. பல்லாயிரக்கணக்கானோர் தோற்றிய பரீட்சையில் விரல் விட்டு எண்ணக்க கூடிய சில முஸ்லீம்களில் அவரும் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டது எமது முஸ்லீம் சமூகத்திற்கு பெருமையாக இருந்தது. கல்முனை பிரதேச செயலாளராக இருந்து அவர் ஆற்றிய சிறப்பான பணிகளை இன்றும் கூட எம்பிரதேச மக்கள் நினைவு கூறுகின்றனர். காத்தான் குடி பிரதேச செயலாளராக இருந்தும் அப்பிரதேச மக்களுக்கு அளப்பெரிய சேவைகளையும் ஆற்றி அப்பிரதேச மக்களின் மனங்களையும் வென்றார். பளீல் அவர்களை மொத்தத்தில் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்றே கூற வேண்டும். கல்வி உலகிற்கு அவர் ஆற்றிய பங்களிபபு மிகப்பெரியது. ஒரு நல்லாசிரியனை நாடறிந்த எழுத்தாளனை ஒரு சிறந்த நிருவாகியை ஒரு சிறந்த சமூக சேவையாளனை ஒரு புத்திஜீவியை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நல்ல மனிதனை இன்று நாம் இழந்து விட்டோம். இறைவா எமது எல்லோர் இதயங்களிலும் குடிகொண்டிருக்கும் அந்த நல்லவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸை பரிசாக வழங்குவாயாக. ஆமீன்

A. **ஆதம்பாவா** (B.A - Econ Sp, Dip in Edu)
அதிபர் அல் பஹ்றியா மகா வித்தியாலயம், கல்முனை,

# அல் ஹிதாயா மகா வித்தியாலயத்திலிருந்து....

அறிவிலும், ஆற்றலிலும், அழகிலும் ஏன் சிரிக்கும் போதும் கூட குழி விழுந்த கன்னத்தோடு பிரகாசிக்கும் பளீலின் முகம் இன்றும் என் மனக்கண்ணில் நிழலாடுகின்றது. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை அவரோடு நெருங்கிப்பழகியவர்களில் நானும் ஒருவன். கிட்டிப்பொல்லு முதல் பட்டம் கட்டி விளையாடுவது வரை பல தரப்பட்ட விளையாட்டுக்களை விளையாடுவோம். இவற்றிலும் இவரே முதன்மை பெறுவார். சித்திரம் வரையும் ஆற்றலும் இவருக்குண்டு. ஆங்கில எழுத்துக்களால் அழகான வசனங்களை 5ஆம் வகுப்பிலிருந்தே எழுதும் ஆற்றல் அவருக்கு இருந்தது. நண்பர்க ளுக்குள் ஏற்படும் தகறாறுகளை சமாளித்து தீர்ப்பு வழங்கும் ஆற்றலையும் அவர் சிறுவயது முதல் கொண்டிருந்தார். பத்திரிகைகளில் வெளிவரும் படத்துடன் சேர்ந்த ஜோக்குகள் மாதிரி கையெழுத்துப்பத்திரிகை தயாரித்து படித்துக்காட்டி எங்களை சிரிக்கவைப்பார். மிகவும் சிறப்பு வாய்ந்த ஆற்றல்களை சிறுவயது முதல் பெற்றிருந்த இவர் பலவகைப்பட்ட சங்கங்களிலும், அமைப்புக்களிலும் முற்போக்கு மன்றங்களிலும் தலைவராகவும், செயலாளராகவும் இருந்திருக்கிறார்.

வறுமையும், பொறுமையும் அவரோடு கூடப்பிறந்தது. அதனால் தான் அவரால் பலதரப்பட்ட நூல்களை எழுத முடிந்தது." பல்கலைக் கழக கல்வி நிலையம் " என்ற பெயரோடு பல நூல்களை வெளியிட்டார். மேலும் கவிதைத்தொகுதிகளையும், சிறுகதைத்தொகுதிகளையும் வெளியிடத்தொடங்கினார். பட்டதாரி ஆசிரியரான பின்பு ஆயிரம் ,ஆயிரம் மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு தயாராக்கினார். இவரின் திறமையையும் ஆற்றலையும் அறிந்த மறைந்த மாபெரும் தலைவர் மர்ஹூம் MHM அஸ்ரப் அவர்கள் ,கல்முனைப் பிரதேச செயலகத்திற்கு பொருத்தமான ஒருவர் ALM பளீல் என்று புகழாரம் சூட்டினார். அவர் ஏகப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் எடுத்த கருமங்களை திறமையாக செயற்படுத்திக்கொண்டிருந்தார்.

கல்முனையில் இருந்து! காத்தான்குடிக்கு இடமாற்றம் பெற்ற இவர் காத்தான் குடி பிரதேச செயாலகத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த போது சுடப்பட்ட செய்தி கேட்டு திடுக்கிட்டோம். இவ்ஊரே திரண்டு ஒப்பாரி வைத்தது. உதவிக்கரம் நீட்டினோம். ஆனாலும் இறைவன் தன்கரம் அணைத்துக் கொண்டான். இறைவா கல்விக்காகவும், சமூகப்பணிக்காகவும் தன்னை அர்ப்பணித்த இம்மகனுக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சொர்க்கத்தை வழங்குவாயாக. என்று பிராத்திக்கின்றேன்.

MLA **கையூம்** (BA - Dip in Edu)
அதிபர் அல் ஹிதாயா மகா வித்தியாலயம் - சவளக்கடை





# நற்பிட்டிமுனை முன்னோடி ஒருவரிடமிருந்து...

நற்பிட்டிமுனைக்கு முகவரி இட்ட பெருமைக்குரியவர்,
மர்ஹூம் ALM பளீல் அவர்கள் என்பது, வெள்ளிடைமலையாகும்.

தாவரவியல் ஆசிரியரான இவர், நிருவாக சேவை போட்டிப் பரீட்சை சித்தியின் மூலம் கல்முனை உதவி அரசாங்க அதிபராக 1991.04.01. இல் நியமிக்கப்பட்டதிலிருந்து சுமார் பத்தாண்டு காலங் களுக்கு மேலாக, கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றினார் அவ்வேளையில் கல்முனை மாநகர விசேட ஆணையாளராகவும், கல்முனை பலநோக்கு கூட்டுறவுச்சங்க விசேட ஆணையாளராகவும், சேவைசெய்தார்.. சில காலம் அம்பாரை மாவட்ட மேலதிக காணி ஆணையாளராக. பணியாற்றி பின்னர் 2003.01.01. இலிருந்து மரணிக்கும் வரை காத்தான்குடி பிரதேச செயலாளராக பணியாற்றிய இவர் கல்முனை, காத்தான்குடி, ஓட்டமாவடி மற்றும் ஏறாவூர் பிரதேச மக்களின் மனங்கவர்ந்த மரியாதைக்குரிய மனிதராக மதிக்கப்பட்டார்.

நற்பிட்டிமுனை கிராமத்தின் மாண்பையும், மதிப்பையும் மேலோங்கச் செய்யவேண்டுமென்பதற்காக, மர்ஹூம் பளீல் பிறந்த மண்ணிலேயே திருமணம் செய்து கொண்டதென்பது, அவர் இவ்வூரில் கொண்டுள்ள பற்றை பறை சாற்றுகின்ற ஒன்றாகும்.

மர்ஹூம் பளீல் நாடறிந்த பலதுறை எழுத்தாளராக, இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக, பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். மேலும் வெளிவாரி ஓராண்டு சட்டக் கற்கை நெறியைப்பூர்த்தி செய்திருந்த இவர், தென்கிழக்கு பல்கலைக்கழக இதழியல் மற்றும் ஊடகத்துறைசார் பகுதி நேர விரிவுரையாளராகவும், பணியாற்றி படித்த, ,பாமர மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்றிருந்தார். இவர் எத்தனையோ பணிப்பழுக் களுக்கும் மத்தியில் எதிர்காலச் சந்ததி நன்மையடைய ஏணியாகவும், தோணியாகவும் இருந்து சேவை செய்தார்.

வெள்ளை உடையணிந்து. வெள்ளைக்காரில் பவனி வந்த. வெள்ளைப்புறா நற்பிட்டிமுனை பளீல் இவ்வுலகை விட்டுப்பிரிந்தாலும். அவரது பணிகள் என்றென்றும் நிலைத்து நின்று அன்னாரை ஞாபக மூட்டிக்கொண்டேயிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதி கிடைக்க இரு கரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்.

A. **அப்துல் கபூர்** (பிரதி அதிபர்)
நற்பிட்டிமுனை.

## நற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாசலிருந்து....

நற்பிட்டிமுனை வாழ்
மக்கள் யாவரும் ,
கண்ணீரால்
எங்கள்
மனக்காயங்களை
கழுவினாலும்..
கல்விமான்,
கற்றவர் பத்தியில்
புகழ் பூத்த புத்திமான்.
கலை இலக்கியத்தில்
கால் பதித்த பக்திமான்.
சொத்துக்களில் ஒன்றாகவும்
முதுகெலும்பாகவும் இருந்த
மர்ஹும் ALM பளீல்
பிரதேச செயலாளரின் இழப்பு
எக்காலத்திலும்
எங்களால் ஈடு செய்ய முடியாதது.
அன்னாரது இழப்பு
எமது ஊருக்கு ஏற்பட்ட
அளப்பரிய இழப்பாகும்.
இச்சந்தர்ப்பத்தில்
அந்நாரின் ஈடேற்றத்திற்காக நாம் அனைவரும் இறைவனிடம்
பிரார்த்தனை செய்வோமாக..

தலைவர்
HMM. **நஸீர்** (JP)
ஜூம்ஆ பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை,
நற்பிட்டிமுனை.





## மஸ்ஜிதுல் அசூர் நிருவாகத்திடமிருந்து....

நற்பிட்டிமுனை நாயகன் மறைந்ததேனோ?

எனது கிராமத்தின் நடுத்தரக்குடும்பத்தில் தோன்றி தன்முயற்சியில் சற்றும் தளராது வித்தகனாய் கல்வி கற்று, எத்தனையோ மாணவர்களுக்கு ஏணியாய், அவர்கள் வாழ்க்கைப் பயணத்தின் தோணியாய் துணை நின்று தூக்கி விட்டாய் நீ.

புன்னகை தவழும் உன் முகம் எத்தனை மனிதர்களை உன்வசம் ஈர்த்துக்கொண்டது என்பது எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் தெரியும். உன்அறிவாற்றலை, எழுத்து வன்மையை ஊரறியும், உலகறியும். அத்தனையும் மறந்து விட்டு உன்முகத்தை மறைத்தவர் யாரோ ?

தன்னம்பிக்கையின் முன்னோடி நீ. தானாக உன்னை வந்தடைந்த உயர்வுகள் அதற்கு வழிகாட்டிகள். விழிகாட்டி ஜாலம் செய்யும் இக்காலத்தில் ஒளி காட்டி மறைந்ததேனோ ? நற்பிட்டிமுனை பளீல் எனும் நாமத்தைச்சுமந்த நீ, எத்தனை பட்டங்களைப்பெற்றாய். நற்றாய் உனை ஈன்ற பெருமையை எமக்கும், எம்கிராமத்திற்கும் வாரிக்கொடுத்த நாயகனே.. நீ என்றென்றும் இறைவனிடம் இருப்பதற்கோ விதி என்ற பெயரில் சதி நிகழ்ந்தது.

உன் மறைவால் ஏங்கி நிற்கும் உன் மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர் அனைவருக்கும் அல்லாஹ்வின் அருள் மழை பொழிவதற்காய் அனுதாபம் தெரிவித்து, மர்ஹூம் பளீல் அவர்கள் சொர்க்கத்தை அடைய துஆச்செய்கின்றோம்

M.I **அஸீஸ்** (LL.B)
தலைவர்
மஸஜிதுல் ஆசூர் பள்ளிவாயல்
நற்பிட்டிமுனை.

# தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்திடமிருந்து ...

ஊடகவியலாளர்களின் உற்ற நண்பன் பளீல்

பிரதேச செயலாளர் ஒரு நிருவாக உத்தியோகத்தர். ALM பளீல் எனத்தெரிந்த, அறிந்தவர்களை விடவும் நற்பிட்டிமுனை பளீலை அறிந்தவர்கள் நேசித்தவர்கள் அதிகம்

ஒரு நிருவாக உத்தியோகத்தராக, பன்னூலாசிரியராக , எழுத்தாளராக, ஊடகவியலாளராக திகழ்ந்த மர்ஹூம் பளீலின் இழப்பு முஸ்லீம் சமூகத்திற்கு மட்டுமன்றி ஏனைய சகோதர சமூகத்தவர்களுக்கும் பேரிழப்பாகும். மனச்சாட்சியுள்ள ஒவ்வொருவரும் இதனை ஏற்றுக்கொள்வர்.

ஊடகத்துறையினரைப் பொறுத்தவரை கல்முனைப் பிரதேசத்தில், ஊடகவியலாளர்களுக்கு உரிய கௌரவமும் ஒத்துழைப்பும், ஊக்குவிப்பும் வழங்கிய பெருமைக்குரியவர் மர்ஹூம் பளீல் அவர்களாவார்.

தான் பிறந்த மண்மீது கொண்ட பற்றும் நேசமும் காரணமாகத்தனது ஆக்கங்களில் நற்பிட்டிமுனை பளீல் என்ற நாமத்தைச்சூடி பிறந்த மண்ணுக்குப்பெருமை சேர்த்த இப்பெருமகனின் நாமம் என்றும் வாழும்.

நண்பர் பளீலின் உயிர் காவு கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் எம் உள்ளத்தில் எம்முடன் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

வழக்கமான அந்தப்புன்முறுவலுடனும், தனக்கே உரித்தான அந்த வெள்ளை நிறத்தோற்றத்துடனும் நண்பர் பளீல் என் எதிரே நிற்பது போன்ற பிரமை ஏற்பட - உள்ளம் நெகிழ்ந்து உணர்வு மேலிடுகின்றது. கண்கள் குளமாகின்றது.

ALM. **சலீம்**
தலைவர்
தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்
நிந்தவூர்





# தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்திலிருந்து...

ஒளியே நீ எங்கு சென்றாய்

அன்று ...
புனித வெள்ளிக்கிழமை..
தூய உன் மேனியை துப்பாக்கி ரவைகள் துளைத்து விட்டன.
என்ற செய்தி கேட்டு துடிதுடித்துப்போய் விட்டேன்.

உயிருக்காக நீ போராடிக்கொண்டிருந்த வேளை அந்த உயிருக்கு
ஒன்றும் ஆகிவிடக்கூடாதென்று அல்லாஹ்வைப் பிரார்த்தித்தேன்.
ஆயுளை நீடிக்க வேண்டி அல்லாஹ்வைப் பிரார்த்தித்தேன்.
ஆனால் ..... ஆனால்... ஐயஹோ...
அழகிய உன் ஆத்மா இறைவனடி சேர்ந்து விட்டதாய் பின்னர்
அறிந்து பிரமித்துப்போய் விட்டேன்.

எனது பள்ளிப்பருவம் தொட்டு பவுத்திரமான நட்பு நமக்குள்
இலக்கியம்.. எழுத்து.. இனிய நல்ல சமுதாயப் பற்று..
அரக்க குணமற்ற அன்பு நெஞ்சம்.
காணுகின்ற போதெல்லாம் நாங்கள்
கதைப்போம் இலக்கியத்தை.

எங்களது மனித சமுதாயம் பற்றி
கண்ணீர் பனிக்க சில கதைகளும் சொல்வாய். பின்னாளில்
இதழியல் டிப்ளோமா எனும் எனது கல்விக்கு ஏற்றதொரு ஆசானாய்
ஆகிப்போனாய். அதனால் உன்னில் எனக்கு எப்போதும் ஒரு மதிப்பு.
வெள்ளை உடைக்குள் நீ ஒரு வீரத்தளபதி
கல்விக்குள் என்றும் கலங்கரை விளக்கானாய்.
வல்லவனாய் இருந்து பலரை வாழவைத்து அழகு பார்த்தாய்.

ஆசிரியனாய் அற்புதக்கவிஞனாய், கலைஞனாய்.. எழுத்தாளனாய் புத்தகம்
பலவற்றை ஆக்கித்தந்த புத்திஜீவியாய் மட்டுமா
அரச நிருவாகத்துறையில் நின்று ஜொலித்தாய் நினைவில் பதிந்தாய்.

உதவி அரசாங்க அதிபராகி பிரதேச செயலாளராகி பிரமிக்கும் கல்விமானாகி ஏன் சட்டத்துறையையும் ஒரு ஆண்டு தொட்டு வைத்தாய். தொடர நினைத்தாய்.
அனைவரும் அன்பால் சமத்துவமாய் வாழ சரிநீதி செய்தாய்

நேரிய நன்னடை.. நெஞ்சத்தில் உறுதி.. கூரிய பார்வை கொள்கையில் ஒரு பிடிப்பு ஆற்றிடும உரை அதிலும் ஒரு தெளிவு அறிவு ஊற்று நீ சோதரா.
சிகரமாய் நின்ற நீ இன்று உறங்கிப்போனாயே..
நற்பிட்டிமுனைக்கிராமத்தின் நவஜோதி நீ
என்புத்தகம் ஒன்றிற்கு இனிய அணிந்துரை ஒன்றை அளித்திட வேண்டும் நீயென்று எண்ணியிருந்தேன். ஆனால் அதற்குள் சென்று விட்டாயே..

உன் பிரிவால் இன்று உள்ளங்கள் துடிக்கின்றதே..
நீ இல்லாமல் நின்று குமுறி அழுகின்றது.
உன்குடும்பத்தாருக்கும் பழகிய உந்தன் பாசமுள்ள உறவுகளுக்கும்
கீர்த்தி பெற்ற உன் கிராமத்தவர்களுக்கும்
எந்தன் இதய ஆறுதலை எத்தி வைக்கின்றேன்.
இறைவன் அவர்களின் இடரினைப்போக்குவானாக
உந்தன் மறுமை வாழ்வின் மகத்துவத்திற்காக
மாநபி முகம்மது (ஸல்) அவர்களின் மாண்பினைப்பெறுவதற்காய்
சுவர்க்கத்தின் சோடனைக்குள் சுகமாக நீ வாழ வேண்டி
ஏந்தி என் இரு கரங்களையும் இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

**ஜுல்பிக்கா ஷெரீப்(ஆசிரியை)**
செயலாளர்
தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம்
கல்முனை .





# கல்முனை வர்த்தக சங்கம், கல்முனை மாநகர பள்ளிவாயல் சார்பாக....

மர்ஹூம் அஷ்ஷஹீத் ALM பளீல் DS அவர்கள் கல்முனையில நீண்ட காலமாக சேவை செய்தவர். எமது பஸாரிலுள்ள வர்த்தகர்களுடன் மிகவும் நட்புடன் பழகியவர். எமது தேவைகளுக்காக அவரைச்சந்திக்கச்சென்ற போதெல்லாம், இன்முகத்துடன் கௌரவத்துடன் வரவேற்று, உடனுக்குடன் அத்தேவைகளை நிறை வேற்றித்தந்தவர்.

அவர் ஒரு கல்விமான், அன்னாருடைய தேவைகளும், சேவைகளும் எமது சமூகத்திற்கு வேண்டிய நேரத்தில், அன்னாரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

எமது கல்முனை வர்த்தகர்கள் சார்பிலும், கல்முனை நகரப்பள்ளிவாயல் சார்பிலும் அன்னாரது குடும்பத்தாருக்கும்,, நற்பிட்டிமுனை மக்களுக்கும் எமது இதயபூர்வமான அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அல் ஹாஜ் **KM செய்க் அலி**
செயலாளர்
கல்முனை மாநகரப்பள்ளிவாசல் ,
கல்முனை வர்த்தக சங்கம்

## சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றத்திலிருந்து...

காத்தமண்ணுக்கு வந்த உன்னை
காக்க முடியா காத்தான்குடி இன்று
நின் மரணத்திற்காய்
கண்ணீர் சொரிகிறது.

புன்னகித்த உன்முகம்,
புனிதமான உன் தோற்றம்
இனி
புனிதம் சேர் சுவனத்தில்
புகழ் கொள்ளட்டும்.

எழுத்தாளனாய்
எழுத்துக்கடலில் துடுப்பானாய்
நீ புகழ் சூர் சேவையில்
காத்த மண் காக்கும் காவலனாய்
மண் காத்து மானம் காத்து தந்தாய்.
அறிவார்ந்த உன்னால்
அடிமட்ட ஊழியர்களுடனும்
அரசியல் தலைமைகளுடனும்
அன்பானவன் ஆனாய்.
இனி என்று காண்போம்.

உன் பிரிவால் துயருரும்
நின் குடும்ப மனைவி மக்கள்
சுற்றத்தார் அனைவருக்கும்
அல்லாஹ்வின் சாந்தி கிட்டட்டும்.
அல்லாஹ் உன்னை அருள்மாரியில்
நிறை சேர்த்து
ஜன்னத்துல் பிர்தௌஸில்
நிறை வாழ்வு தர இறைஞ்சுகின்றோம்.

**சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றம்**
**பிரதேச செயலகம் – காத்தான்குடி**





## கரையோர அரச சாரதிகள் சங்கத்திடமிருந்து....

கல்முனையின் முன்னாள் பிரதேச செயலாளரும் மாநகரசபை ஆணையாளரும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியும், எழுத்தாளரும், ஊடகவியலாளரும் பல்கலைக்கழக பகுதி நேர விரிவுரையாளருமான ஜனாப் ALM பளீல் அவர்கள் 2005.12.02 வெள்ளிக்கிழமை இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி 2005.12.04 ஆம் திகதி அகால மரணமடைந்தார்.

"இன்னாலின்னாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்."

அன்னாரது மறைவு முஸ்லீம் சமூகத்திற்கு மாத்திரமன்றி அனைத்து சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

இவர் கல்முனை மாநகர சமூகத்திற்காக இரவு பகல் பாராது உழைத்தது மட்டுமல்லாமல் கல்வித்துறையில் ஒரு முன்னணி ஆசானாக இருந்து அனைத்து சமூக மாணவர்களினதும் உயர்கல்வி முன்னேற்றத்திற்காக தன்னையே அர்ப்பணித்த ஒரு அறிவுப்பொக்கிசமாகும். இன்னும் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான பல அறிவு நூல்களையும் பல்வேறு துறைசார் வெளியீடுகளையும் இவர் வெளிக்கொணர்ந்துள்ளார். இவரது இழப்பு கல்வி மான்களால் மட்டுமல்ல முழுச்சமுதாயமும் தாங்கிக்கொள்ள முடியாத வேதனையுடனான ஒரு பேரிழப்பாகும்.

இத்தகைய மிகத்துக்ககரமான நிலையில் நாம் பொறுமை காத்து அன்னாரின் மறுமை வாழ்வுக்காக துஆ பிரார்த்தனையில் ஈடுபடுவோமாக.

இந்நிலையில் இவரது குடும்பத்திற்கும், நெருங்கிய உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கரையோர அரச சாரதிகள் சங்கம்,**
கரையோரப்பிரதேசம்.

# புனித மரியாள் இல்லத்திலிருந்து....

இதயத்தின் ஆழத்திலிருந்து...

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கல்விப்பசியோடு ஆதரவு தேடி அடைக்கலம் நாடி வரும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி ஒளியூட்டி நல்லொழுக்கம் போதித்து வாழ வழிகாட்டும் கலங்கரை விளக்கு புனித மரியாள் மாணவர் இல்லமாகும்

இந்த மாணவர்களது தேவைகளை நிறைவு செய்து கற்பதற்குகந்த சூழலை உருவாக்கி நெறிப்படுத்திக்காக்க வேண்டிய எமது பயணத்தில் அரச உதவி இல்லாத நேரத்தில் அரசாங்க நிதியுதவி பெறும் பொருட்டு உணவு முத்திரையைப்பெறுவதற்காகவும், நாம் எங்கெங்கோ சென்று பலரை நாடினோம். உதவி செய்ய வேண்டியவர்கள் எல்லோருமே கையை விரித்து விட்ட நிலையில் அமரர் ALM பளீல் பிரதேச செயலாளர் அவர்களை நாடினோம். புன் முறுவலுடன் வரவேற்று எம்முடன் உரையாடி எமது வறிய மாணவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து தலைநகரின் பிரதம அலுவலகம் வரை தமது பணியாளரை அனுப்பி எமது இல்ல மாணவர்களுக்கு உணவு முத்திரைகளும், அரசாங்க உதவித் தொகையும் பெற்றுத்தந்தார்.

இன்றும் கூட எம்மாணவர்கள் அந்த உதவிகளைப்பெற்று வருகின்றனர். சுமார் 110 க்கும் அதிகமான மாணவர்களது ஏழ்மையை அறிந்து பெருமனதுடன் அன்னார் செய்திட்ட அந்த உதவிகளை என்றுமே எம்மால் மறக்கமுடியாதவை.

சேவையின் சேவகனாக வாழ்ந்து வரலாற்றின் பக்கங்களை தனது பெயரை நிரந்தரமாக்கி விட்டு அமரத்துவம் அடைந்த ஜனாப் ALM பளீல் பிரதேச செயலாளர் அவர்களுக்கு எமது ஜெபங்களும் வேண்டுதல்களும் சமர்ப்பணமாகின்றன.

**அருட். சகோ. அ. தேவராஜா (தயா)**
இயக்குனர்
புனித மரியாள் மாணவர் இல்லம்
கல்முனை.





# சொந்தமில்லா நினைவுகள்....

மலர்ந்திருந்த வெள்ளியன்று
மறைந்திருந்த செய்தியொன்று
மடை திறந்து வந்ததய்யா. !

எம் நற்பிட்டி மகன்
பளீலை...
சொல்ல முடியவில்லை !

ஏழை மகனாய் அவதரித்தே
ஏணிப்படிகளை
நீர் கடந்தீர்.!
எப்போதும் தடைதாண்டல்
பரீட்சைதான் உன்
தாரகை மந்திரமய்யா !

உன் முகத்தில் தவழும்
மென்புன்னகையும்
சிந்தனையும் சாரளாய்
வெளிப்படுத்தும் வார்த்தை
முத்துக்களையும் நாம்
காண்பதும் கேட்பதும்
இனி எப்போதோ ?

நுண்ணறிவாளனே
உன் மதி நுட்பத்தினால்
எம் மாணவச்செல்வங்களை
தடை தாண்ட வைத்தாயே !

கருணை கொண்ட கவிஞனே
உந்தன் கவியாற்றலையும்
சொற்சிலம்பாட்டங்களையும்
நினைக்கையிலே

என்வாலிபமும் மெல்லச்சாகுதய்யா
உன்சொந்தமில்லா
நினைவுகளில் பல்கலையின்
சொந்தங்களை நாம் அறிந்தோம்.

மதி நிறைந்த மாணவனாய் ....
வாண்மை மிக்க ஆசானாய் ....
விவேகம் கொண்ட வித்தியாபதியாய்....
பிரியமுள்ள பிரதேச செயலாளராய்...
உந்தன் திறமைகளை
என்னவென்று உரைப்பதய்யா..!

இலக்கியம் பற்றிக்
கலந்துரையாடுகையில்
ஆக்கம் பற்றியே
அதிகம் உரைப்பீரே..!
அந்திம நேரத்தில்
அவசரமாய் விடை பெற்றாயே..
இதற்குத்தானா?
தெரிந்திருந்தால் வழியனுப்பி
இருக்க மாட்டோமய்யா ?
ஐயா பளீலே !
இனி நீ பேசப்போவதில்லை ,
உன் கவி பேசும்.!
உன் நுண்ணறிவு வீசும்!
உன் ஆளுமை பாராளும். !
கடந்த காலத்தடயங்களால்..
உன்
சொந்தமில்லா நினைவுகளுடன்
நாம் இரு கரம் ஏந்துகின்றோம்.
உன் மறுமைச்சுபீட்சத்திற்காய் !

கண்ணீருடன்
**M.M.அஸ்லம் ஸஜா** (ஆசிரியர்)
மருதமுனை

# தொலைந்து விட்ட முகவுரை....

அரைஞான் கயிறாக
அழகாறு ஓடிவர
நிரை, நிரையாக
நெற்கதிர்கள் தலை குனிந்து
வாழ்த்திசைக்கும்
நற்பிட்டிமுனையிலே வந்துதித்த
ஈழவானத்தின் இலக்கியச்
சூரியன் பளீலே....

பால் வடியும் இளமையும்,
பண்பான உள்ளமும்,
இதழ் விரித்துச்சிரிக்கும்,
இன்முகமும் கொண்ட
காரணன் பளீலே ....

புலமைப் பரிசிலுக்கும்,
பதவியுயர்வுக்கும்,
பல்கலைக்கழகத் தெரிவுக்கும்,
நுண் அறிவு வளர்க்க - பல்
நூல்களைப் படைத்தவன்
நீயல்லவா ?

நற்பிட்டிமுனை - என்ற
நாமத்திற்கு
முத்திரையொட்டி,
முகவுரையிட்ட
மனிதப்புனிதன்
நற்பிட்டிமுனை பளீலே....
கண்களிலிருந்து
கசியும் - கண்ணீரைத்தொட்டு
எழுதுகின்றோம்
கண்களுக்குள் - நீ
இருப்பதனால்.

இழந்தோம் - உன்னை மட்டுமல்ல
இழக்கச்செய்தோம்
இருள் துடைக்கும் - எங்கள்
இலக்கிய சூரியனையும்.

பொறுமை மிகு பெருமானே
பெருமை மிகு ரஹ்மானே
எமது
எழில்மிகு மன்னனுக்கு
மறுமைதனில் உயர்வு கொடு
மன்றாடி இறைஞ்சுகின்றோம்.

**சப்றோஸ் ஜமால்**
MANS மறுமலர்ச்சி ஒன்றியம்
நற்பிட்டிமுனை.





# கண்ணீரில் கசிந்த கதை....

ஆதம்லெவ்வை முகம்மது பளீல்
அழகான மாமனிதர், அன்பான பண்பாளர்
சிரித்த முகமுடையோன் சீதேவி இருதயத்தான்
வெள்ளை உடை அணிவான், துள்ளு நடை வருவான்
அருமை ஆசிரியர், அதியுயர் நிருவாகி
பட்டப்பகலிலே சுட்டுக்கொல்லப்பட்ட சோகக்கதை கேட்டு
அருமை நண்பர், அன்பான மனைவி மக்கள்,மாமன் மாமி ,
ஆசிரியர் மாணவர், உற்றார் உறவினர், பெரியோர் பேரறிஞர்கள்,
சோகமாக இருந்த காட்சி சொல்லி அழ முடியாதம்மா

ஆரம்ப காலத்திலேயே ஆசிரியராக இருந்து
போட்டிப்பரீட்சை மூலம் அரச சேவையிலே
அதியுயர் நிருவாகி ஆனார்
கல்முனை பிரதேச செயலகத்தில்
காலங்கள் பல சேவைகள் செய்தார்.
காத்தான்குடியிலும் பல காலங்கள்.

கரைவாகுப்பிரதேசத்திலே பிரபல கலங்கரை விளக்காக
கற்றுக்கொடுக்கும் ஆசிரியனாக
கடமையை திறம்படச்செய்த சேவகனாக
கதை எழுதும் எழுத்தாளனாக
போட்டிப்பரீட்சைக்கு வழிகாட்டியாக
பொதுச்சேவையில் போராளியாக
நாள் முழுவதும் நன்மைகள் செய்தார்.

பிறர் வாழ நீ வாழ்ந்தாய்
பலர் வாழ நீ வழிசமைத்தாய்
கதை வாழ நீ கதை சமைத்தாய்
கற்றவர் வாழ நீ புத்தகம் சமைத்தாய்
இல்லறம் வாழ நீ நல்லறம் சமைத்தாய்
இல்லாதவர் வாழ நீ இயன்றதை செய்தாய்.

உனது ஆத்மா சாந்தியடைய
நாம் அனைவரும் கையேந்தி
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்
நீ சென்றிடுவாய் சொர்க்கம்.

**S . அஸீஸுல்லாஹ்**
**U M இஸ்ஹாக்**
**MAM இல்யாஸ்**

# தங்க மகனின் பிரிவு....

நற்பிட்டிமுனையின் பெயரைத் தரணிக்குக் காட்டிய தங்க மகன் "நற்பிட்டிமுனை பளீல் " சுடப்பட்டு விட்டார் என்ற செய்தி கேட்டு அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ வில் அன்னாரிடம் கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் அவர் உயிர் பிழைக்க வேண்டுமென்று துஆ பிரார்த்தனை செய்தார்கள்.

தான் கற்ற கல்வி தனக்குள்ளேயே அடங்கியிருக்க கூடாது என்று தனது சமுதாயத்திற்கு அதனைப்பகிர்ந்து கொள்வதில் அலாதிப்பிரியம் பளீலுக்கு.

"சொந்தமில்லா நிஜங்கள்" மூலம் தனது வாழ்க்கை வரலாற்றை முடுக்கி விட்ட அவர் அதில் தனது நண்பர்களை இணைத்துக்கொள்ள தவறவில்லை. அவரிடம் இன மத வேறுபாடு என்பது அறவே கிடையாத ஒன்றாகும்.

நிருவாகத்திறமையை மிகம் இளம் வயதிலே ஏற்படுத்திக் கொண்ட பளீல் எந்த ஒரு நிகழ்வையும், செய்திகளையும் சுவாரஸ்யமாக எடுத்துரைப்பதில் அவருக்கு நிகர் அவரே.

அவரது சேவையை பெற்றுக்கொண்டதால் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி பெருமையடைந்ததை எவராலும் மறைக்க முடியாது.

"BOTANY FALEEL" என்றால் அகில இலங்கைக்குமே தெரியும் வண்ணம் பிரகாசித்ததுடன் அப்பாடத்தில் இலகுவாக "A" சித்தியை பெற்றுக்கொள்ள முடியும் என்று வழிகாட்டிய முதல் மனிதன்.

அன்னாரின் இழப்பில் உருகும் அனைத்து நெஞ்சங்கள் சார்பிலும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாருக்கு "ஜன்னத்துல் பிர்தௌஸ்" கிடைக்க எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கும்...

நண்பன்
MIM **அஸ்கர்**
(நவமணி - மாளிகைக்காடு செய்தியாளர்)





# சரிந்து விட்ட சரித்திரம்....

வந்தாரை வாழவைக்கும்
வளம் நிறை மண்ணில் வந்துதித்த
வளர்பிறை பிரதேச செயலாளர் பளீலே

சின்னச்சின்ன சிரிப்-பூக்களை
சிறைப்பிடித்துக்கொண்டு
அகமும் முகமும் பளிங்காய் ஒளிரும்
வெண்புறாவாக பவனி வந்தாய் உலகில்

உன் மரணச்செய்தி கேட்டு
மரத்துப்போன எம் விரல்களால்
கண்ணீர் கலந்த
கவிதை மட்டும்தான் எழுத முடியும்.
எம் இதயம் இருண்டும்
நா வரண்டும் இருப்பதால்.

புலமைப்பரிசில்,, பதவியுயர்வு,
பல்கலைக்கழகத்தெரிவு
பட்டப்பின் படிப்பு என
பல துறை நூல்கள் படைத்தவன் நீ
ஏன்
செந்தமிழில் விந்தைகள் பல படைத்து
இலக்கியத்துறையில்
இமயம் தொட்டவனும் நீ.

உன் அறிவு வழி காண
உத்தமர் பலபேரை வேண்டி நிற்கையில்
உன்னையே தொலைத்து
ஊனமாய் நிற்கின்றோம்.

சிந்தனைகளை
சிறையிட்டுக்கொள்ளா
உன்
சின்ன வயது முதலான
அச்சர வித்துக்கள் போதும்
அவனியிலே பல அறிவாளிகளை
அறுவடை செய்ய.

**– ஷோர்கி –**

# மீண்டும் .... பளீல்....

ஒரு கிராமமல்ல
ஒரு தேசமே சோகம் கொண்டது.
விடிந்த பொழுது மறைவதற்குள்
நிகழ்ந்த விபரீதம் கண்டு .

பளீலே....
நிருவாகத்தில் மட்டுமல்ல
நீ
இலக்கியத்திலும் இமயம் தான்.
அதனால் தான்
எட்ட முடியாதவர்கள்
உன்னை
தட்டி வீழ்த்த முடிவு செய்தனர்.

வரை படத்தில் மட்டுமே
வாழ்ந்து கொண்டிருந்த
இக்கிராமத்தை
வரலாறு படைக்க வைத்தாய். .
இதனால் இன்று
உன் வரலாறு
வீடுகள் தோறும் வாசிக்கப்படுகின்றது.

கால் பதித்த துறைகளிலெல்லாம்
கரை கண்டாய்.
நீ
காத்தான் குடியில் மட்டுமே ஏன்
மௌனம் கொண்டாய்.

அடக்கம் செய்ய முடிந்தது
உன் உடலை மட்டும்தான்.
உன் சிந்தனைகள்
உணர்வுகளெல்லாம்
மேடை ஏறக்காத்திருக்கின்றன.
ஒரு பளீலாக அல்ல.
நீ உருவாக்கிய ஓராயிரம் பளீல்களாக..

**M I. ஜெலீல்**
புகையிரத நிலைய அதிபர்
கொழும்பு.





# மடிக்குள் விழுந்த வெள்ளி மண்ணில் வீழ்ந்தது

'தலை மகன் தலை சாய்ந்தான்'
காலையில் ஒரு செய்தி
காற்றிலே கலந்தது
'நமுனை பளீல்'
நம்மைவிட்டுப் போய்விட்டார்!

உதிரம் உறைந்தது
உணர்ச்சிகளால்!
பெற்ற மண் பெருநதயானது
கண்ணீரினால்!

ஆசிரியனாய்
கவிஞனாய்
கலைஞனாய்
எழுத்தாளனாய்
விமர்சகனாய்
நிருவாகியாய்
நீ
அணிசேர்த்த துறையோ
ஆயிரம் - உன்
பணியினால் பயன் பெற்றோரோ
பல்லாயிரம்.

உன் கற்பனையில் உதித்த
கவிதைகள்
உன் கைவண்ணத்தில் பிறந்த
சரிதைகள்
அத்தனையும் எம் நெஞ்சில்
இளமைகள்

'மடிக்குள் விழுந்த வெள்ளிகள்'
இலக்கிய உலகின் - உன்
முதற் புள்ளிகள்

'தெரிந்திருக்க வேண்டிய சட்டங்கள்'
இது நீ அறிந்தது
தெரியாமல் போன வட்டங்கள்
அதுதான நயவஞ்சகத் திட்டங்கள்
நீ அறியாதது

'மெல்லச் சாகும் வாலிபம்'
இது நீயிட்ட தலைப்பு
மெல்லப் போகும் உயிர்
இது இறைவன் இட்ட தீர்ப்பு

கடமையை உயிராக மதித்தாய் - உன்.
கடமைக்கு விலையாக
உயிரையே கொடுத்தாய்
பெற்ற மண் பெருமையடைகிறது
அநியாயம் உன் முன் சிறுமையடைகிறது.

உன் மார்பினில் பாய்ந்த ரவைகள் - எம்
நெஞ்சில் ஆறா ரணங்கள்
நீ மண்ணில் அடக்கப்படவில்லை
விதைக்கப்படுகிறாய்

நீ பசிபோக்கிய ஏழைகள்
பாசம் கொண்ட இதயங்கள்
இம் மண்ணின் மைந்தர்கள்
என்றும் உனக்காக பிராத்திப்பார்கள்.

**- றஸ்மி ஜமால்டீன் -**

Virakesari Saturday 03rd December 2005

# காத்தான்குடி பிரதேச செயலாளர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்

புதிய காத்தான்குடி, காத்தான்குடி பிரதேச செயலாளர் ... நேற்று நண்பகல் ... லகத்தில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர்

Virakesari Monday 05th December 2005

# காத்தான்குடியில் இரண்டாவது நாளாகவும் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

காத்தான்குடி, ... ஏ.எல்.எம். பளீல் கடந்த வெள்ளிக்கி...

## காத்தான்குடி பிரதேச செயலாளர் மீது துவக்குச் சூடு படுகாயத்துடன் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது இலக்கத்தகடுகளற்ற மோட்டார் சைக்கி ளொன்றில் தலைக்கவசங்கள் அணிந்தவாறு வந்த இரு இளைஞர்கள் காத்தான்குடி பிர...

...எல்.எம். பளீல் கடந்த வெள்ளிக்கிழமை ஆயுததாரிகளால், சுடப்பட்ட...ராகவும் ...மையை கண்டித்து நேற்று முன்தினம் முதல் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ஹர்த்தால் காரணமாக இரண்டாவது ...கள். பொதுச் சந்தை

# விடைபெற்றது வெள்ளைப்புறா!



வெள்ளை உடை அணிந்து வெள்ளைக் காரில் பவனி வந்த வெள்ளைப் புறா முன்னாள் காத்தான்குடி பிரதேச செயலாளர் மர்ஹூம் ஏ.எல்.எம். பளீல் கடந்த 2005.12. 04 ...

01 ஆம் திகதி தொடக்கம் காத்தான்... செயலாளராக நியமிக்கப்பட்டார். இரண்டா... காத்தான்குடி பிரதேச செயலாளராக க... வந்த மர்ஹூம் பளீல் காத்தான்குடி மனங்கவர்ந்த மரியாதைக் குரிய மதிக்கப்பட்டார்.

நற்பிட்டிமுனைக் கிராமத்தின் ம... மதிப்பையும் மேலோங்கச் செய்ய என்பதற்காக மர்ஹூம் பளீல் பிறந்த ...

# அம்பாறை மாவட்ட முஸ்லிம் பகுதிகள் நேற்றும் ஸ்தம்பிதம்

சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம், காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பழீல்



தரையில் வீழ்ந்த தங்கதத் தட்டு

THINAKARAN SATURDAY DECEMBER 03 2005

# காத்தான்குடி பிரதேச செயலாளர் பழீல் மீது துப்பாக்கிச் சூடு

## மோட்டார் சைக்கிளில் வந்தோர் துணிகரம்

# காத்தான்குடி பிரதேச செயலாளர் நேற்றுக்காலை கொழும்பில் மரணம்

கல்முனை, டிச.05

கடந்த வெள்ளிக்கிழமை சுடப்பட்டு படுகாயமடைந்த காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ.எல். ...

செயலாளர் பளீல் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டார். அதனால் நெஞ்சுப் பகுதியை துப்பாக்கி ரவைகள் பதம்பார்த்தன

குடிப் பகுதிகளும் சோகத்தில் மூழ்கியுள்ளன.

செயலாளர் பளீலின் கொலைச் சம்பவத்தை ஐக்கிய ...

EMBER 08 2005 THINAKARA

...ர் ஒளி • திங்கட்கிழமை, டிசம்பர் 05,

# பிரதேச செயலாளர் பளீலின் கொலையை கண்டிக்கிறது தேசிய முஸ்லிம் கவுன்சில்

...டர் ஒளி • திங்கட்கிழமை, டிசம்பர்

# பிரதேச செயலாளர் கொலைக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

புத்தளம், டிச.05

பொதுமக்களின் சேவைக்...

...னர்களும் தமது

Thinakaran Vaaramanjari

# காத்தான்குடியில் நேற்று ஹர்த்தால்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. 02.12.2005 வெள்ளிக்கிழமை ...

...வும் இடம்பெறாத போதிலும் பிரதான வீதி வழியான மட்டக்களப்பு - கல்முனை போக்குவரத்துகள் இடம்பெற்றன.

THINAKARAN TUESDAY DECEMBER 06 200

## பிரதேச செயலர் பளீல், தோப்பூர் துப்பாக்கிச் சூடுகள் கிழக்கு மாகாண ஜம்இய்யத்துல் உலமா சபை கண்டன

(சம்மாந்துறை விசேட நிருபர்)

காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ. எல். எம். பளீலின் கொலைக்கும், கிழக் கில் ... நந்த கல்விமானையும், நிர்வாக அதிக ... யையும், தமிழ் உலகம் ஒரு சிறந்த ...

## பிரதேச செயலர் பளீல் கொலை; கதீப் சம்மேளனம் அனுதாபம்

Virakesari Thursday 15th December 2005 15.12.2005

## நிர்வாக சேவை அதிகாரிகள் அம்பாறை மாவட்டத்தில் சுகவீன லீவுப் போராட்டம்; பிரதேச செயலகங்கள் செயலிழப்பு

காரைதீவு, இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங் கம் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பழீல் ... நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து ஒரு சில அலுவலகங்கள் மூடப்பட்ட போதிலும் பல அலுவலகங்கள் ... முனை, அக்கரைப்பற்று வலயக் கல்விக் க ... நியாலயங்கள் வழமைபோல் இயங்கின. அங்கு எந்தப் போராட்டமும் நடைபெ ...

Virakesari Saturday 03rd December 2005

## காத்தான்குடி பிரதேச செயலாளர் துப்பாக்கிச் சூட்டில் பலி

... காத்தான்குடி விசேட நிருபர் ... சமூகத்தின் நல்விவகாரங்களில் செயற் ... செயலாளர் ஏ. ... ட்ட ஓர் உதாரண புருஷராவார். ... இவ்வாறு காத்தான்குடி கதீப் சம்மே ...

## பல்துறை விற்பன்னர் பளீலின் மறைவு பேரிழப்பாகும்

(கல்முனை மத்திய விசேட நிருபர்)

சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரும், காத் திரமான கட்டுரை ஆசிரியரும் ... கொள்ளை கொண் ... யில் மேலும் ...

செவ்வாய் தினகரன் 06 டிசம்பர் 2005

## பிரதேச செயலாளர் பளீலின் மறைவுக்கு (அக்க)ரைப்பற்று ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்

(காரைதீவு தினகரன் விசேட நிருபர்)

மனிதாபிமானச் சிந்தனைகளைப் படைத்து ... பல்துறைசார் சிருஷ்டி ... ஞராக, விரிவுரையாளராக என்று பல்வே றுபட்ட துறைகளிலும் தடம்பதித்து தனது எழுத்துக்கள் மூலமும், நிர்வாகத் திறன் ... மனிதாபிமானச் சிந்தனைகளை ...

## அம்பாறை, மட்டக்களப்பு முஸ்லிம் பிரதேசங்களில் பளீலின் கொலையை கண்டித்து பூரண ஹர்த்தால்





## ...லராக்கக் குழு

M.L. சமீர் (ஆசிரியர்)
W. ஐயூப்கான் (ஆசிரியர்)
U.L ஜெமீல் (P.C)
S. நிசார் (SMA)
V.M. மக்பூல் (ஆசிரியர்)
I.M. சூபி (ஆசிரியர்)
A.L. ஜெரீன் (PHI)
S. இஸ்மாலெவ்வை (CO-OP)
S.M அனஸ் (புக் வேல்ட்)
R.M. லியாஸ் (FI)
C.M. நஜீப் (ஆசிரியர்)
S. சபீயுடின் (CTB)
A.M. ஷீத் (CO)
J.M. றஸ்மி (TO)
C.M. பலாஹிர் (ஆசிரியர்)
A. ஜாஹிர் (ரெய்லர்)

# நன்றிக்குரியவர்கள்

A.M. ஜமால்தீன் (ஓய்வு பெற்ற அதிபர்)
M.I. அஸீஸ் (சட்டத்தரணி)
A.A. கபூர் (பிரதி அதிபர்)
M.L. கையூம் (அதிபர்)
C.N. ஹாலித் (மக்கள் வங்கி)
M.I. தாஹீர் (கல்முனை ஹாட்வெயார்)
A.L.M. அமானுல்லா (இலிகிதர்)
K. சஹீட் (முதலாளி)
S. வாஹீர் (மதலாளி)
A. சவாஹீர் (முதலாளி)
M. கபூர்கான் (முதலாளி)
M. உபைத்துல்லாஹ் (மதலாளி)
A.K. நஜீமுத்தீன் (முதலாளி)





# முடிவின் முகவுரை

இந்தப்பக்கம் இப்புத்தகத்தின் இறுதிப்பக்கமாகலாம். ஆனாலும் இப்புத்தகத்தின் முக்கிய பக்கமாகும். மர்ஹூம் ALM பளீலின் திறமைகளை வெளிக்கொணர்வதிலும், அவரின் முயற்சியில் வெற்றிப்படிகளை தெரியாதவர்களும், குறிப்பாக எதிர்காலச் சந்ததிகளும் தெரிந்து கொளளும் பொருட்டே இதன் வெளியீடு முக்கியத்துவம் அடைகின்றது. வித்தகன் ALM பளீல் எம்மை விட்டு விடை பெற்ற நாளை நினைத்து அவருக்காக வெளியிடப்படும் இப்புத்தகத்திலுள்ள அத்தனை ஆக்கங்களையும் வழங்கிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

12 வருடங்கள் சேவை செய்தார் என்பது அவரின் பதவிககாலமும், கலண்டர்காலமும் ஆகும். ஆனால் 36 வருடங்கள் கொண்ட சேவையை செய்தார் என்பதுதான் அவரின் சேவைகளின் கனங்கள் கொண்ட காலமாகும். இதன் மூலம் அவரின் கால வயது 65 க்கு மேல் என்பதுதான் உண்மை. எனவே ஒரு மனிதனின் சராசரி ஆயுட்காலத்தை அவரும் கொண்டுள்ளார். என்ன ஒன்று உலக வாழ்நாள்தான் குறைவு.

தலைவர் அஷரப்பின் பிரிவின் ஈரம் காய்வதற்கு முன் மீண்டும் ஒரு புத்திஜீவியின் இழப்பு. அரசியல் வாதிகள், கவிஞர்கள், கலைஞர்கள், தலைவர்கள் உருவாகலாம். ஆனால் இத்தனையும் அடங்கிய ஒரு அஷ்ரப் உருவாக முடியாது. பிரதேச செயலாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியளாளர்கள், அறிவு நூலாசான்கள் உருவாகலாம். ஆனால் இத்தனையும் ஒன்றான ALM பளீல் உருவாக முடியாது. இதனால் இவ்விழப்புக்கள் இரண்டும் ஈடு செய்யமுடியாதவையான முக்கியத்துவம் பெறுகிறது.

இப்புத்தகத்தைப் படிக்கின்ற இளைஞர்கள் ஒவ்வொருவரும் ALM பளீலின் வரலாற்றை முன்னுதாரணமாகக் கொண்டு சமுகத்தில் முன்னேற வேண்டும் என்பதுதான் எங்களின் ஆசையும், அவாவுமாகும்.

இப்புத்தகத்தினை வெளியிடுவதற்கு பணஉதவி வழங்கிய அனைவரும் இப்புத்தகத்தின் பெருமைக்குரியவர்கள் ஆகும்.

**– புத்தகக் குழு –**



அந்த ஏழு வானமும

ஒரு கணம

நடு நடுங்கிப் போயின...

பரீலுக்காய்,

தான் எழுதிய

தீர்ப்பை எண்ணி

விதி கூட

வெட்கப்பட்டு

தலைகுனிந்து

நின்றது.

- அனஸ்